# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 மார்கழி 09 செவ்வாய்க்கிழமை (24-12-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:28


உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினை

# படை நிபந்தனை இறுதியானதல்ல
# பேச்சுக்கள் முறிய விடமாட்டோம்

## அரசு சார்பில் அமைச்சர் பீரிஸ் உறுதிபடக் கூறுகிறார்

கொழும்பு,டிசெம்பர்24

**பாதுகாப்பு வலயங்களில் உள்ள தமது சொந்த இடங்களில் பொதுமக்கள் மீள்குடியமர்வதற்கு வழிவிட்டுச் செல்வதற்குப் பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ள நிபந்தனை இறுதியானதல்ல. அது அரசு - புலிகள் பேச்சுக்களைப் பாதிக்காது. பேச்சுக்கள் முறிந்து போவதற்கு இடமளிக்க மாட்டோம். இப்படி அரசின் சார்பில் உறுதி அளித்தார் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.**

அரசு - புலிகள் பேச்சுக்களில் அரச குழுத் தலைவராக உள்ளவர் அமைச்சர் பீரிஸ். அரசாங்கப் பேச்சாளரும்கூட. நேற்றுக்காலை அவர் அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் அமைச்சரவைத் தீர்மானங்களை ஊடகவியலாளர்களுக்கு அறிவித்தார்.

அப்போது படையினரின் நிபந்தனை பற்றி அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து தாம் விலகுவதற்குப் படையினர் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் வெளியாகின

கொழும்பு,டிசெ.24

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கும் வெட்டுப்புள்ளிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த முறை 13ஆயிரத்து 35 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றிருப்பதாக பல்கலைக்கழக ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் வி.ஆர்.ஆர்.எம்.மெண்டிஸ் தெரிவித்தார்.

வெட்டுப்புள்ளிகளின் முழு விவரத்தை 2ஆம் பக்கத்தில் பார்க்கலாம்.

கலைத்துறைக்கு, சென்ற ஆண்டுகளைவிட இந்த முறை பட்டப்படிப்பை தொடர்வதற்கு அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கலைத்துறைக்கு 3 ஆயிரத்து 91 பேரும், மருத்துவ பீடத்திற்கு எண்ணூற்று 91 பேரும், பொறியியல் பீடத்திற்கு எண்ணூற்று 60 பேரும் அனுமதிக்கப்படுவார்கள்.

கடந்த ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் 2 லட்சத்து 10 ஆயிரம் பேர் தோற்றினார்கள். 92 ஆயிரத்து 250 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கான அடிப்படைத் தகுதிகளைப் பெற்றிருந்தனர். (ம)

சமஷ்டிக் கட்டமைப்பை உருவாக்க

## பிரிட்டனின் ஆலோசனைகளும் பொருளாதார உதவிகளும்

கொழும்பு,டிசெ.24

சமஷ்டிக் கட்டமைப்பில் அதிகாரப் பகிர்வுக்கு பிரிட்டன் நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்க முன்வந்திருக்கிறது. பொருளாதார உதவிகளை வழங்கவும் பிரிட்டன் உறுதி அளித்திருக்கிறது என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சில தினங்களுக்கு முன்னர் லண்டன் சென்றிருந்தபோது பிரிட்டனின் வெளியுறவு அமைச்சர் ஜக்ஸ்ட்ரோவைச் சந்தித்து உரையாடினேன்.

சமாதான முன்னெடுப்புக்கள் குறித்தும் பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்தும் அவர் மகிழ்ச்சியும் பாராட்டும் தெரிவித்தார்.

அதிகாரப் பரவலாக்கலுக்கு ஸ்கொட்லாந்து, அயர்லாந்து ஆகிய

(14ஆம் பக்கம் பார்க்க)

## வெஸ்ட்பேர்க்கிற்கு எதிராக ஜனாதிபதியும் போர்க்கொடி

கொழும்பு,டிசெ.24

விடுதலைப் புலிகளுக்கு வானொலி உபகரணங்களை வழங்கியதற்காக நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்ட்பேர்க்கிற்கு எதிராக சாத்வீகப் போராட்டங்களை முன்னெடுப்பதற்குத் தாம் திட்டமிட்டிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

வானொலிச் சாதனங்களை புலிகளுக்கு வழங்கியதன் மூலம் நோர்வேத் தூதுவர் நாட்டின் இறைமையையும் ஒழுங்குகளையும் மீறியிருக்கிறார் எனவும் -

இதுகுறித்துத் தாம் மிகவும் கவலையடைந்திருப்பதாகவும் - ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார்.

இதற்காக நோர்வேத் தூதுவர் வெஸ்ட்பேர்க்கிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் - சாத்வீகப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கும் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் -

இதற்குரிய ஆலோசனைகள் தமது கட்சிப் பிரமுகர்களிடம் கோரப்பட்டிருப்பதாகவும் - ஜனாதிபதி மேலும் சொன்னார். (ம-4)

## புலிகளுக்கு வானொலி சாதனம்: அரசு அறிக்கை

கொழும்பு,டிசெ.24

தமிழீழ விடுதலைப் புலிகளின் பாவனைக்காக இறக்குமதி செய்யப்பட்டுள்ள அதி சக்திவாய்ந்த ஒலிபரப்புச் சாதனங்கள் தொடர்பான சகல உண்மைகளையும் மக்களுக்குத் தெரிவிக்க அரசு தயாராக இருக்கிறது. இது தொடர்பாக அரசு இன்னும் சில தினங்களில் விரிவான அறிக்கை ஒன்றை வெளியிடும் என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுக் கூறினார்.

நோர்வே தூதரகத்தின் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கான ஒலிபரப்புக் கருவிகள் சட்டவிரோதமான முறையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் நோர்வே தூதரகம் இராஜ துரோக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் எதிர்க் கட்சி

(14ஆம் பக்கம் பார்க்க)



இலங்கைக்கான நோர்வேத் தூதுவரை நாட்டைவிட்டு வெளியேற்றும்படி தேசிய பௌத்த பிக்குமார் முன்னணி நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது. ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பௌத்த பிக்குமார் நோர்வேயின் தேசியக்கொடிகளை தீயிட்டுக் கொளுத்துவதைப்படத்தில் காணலாம். (ம)

மக்கள் மீள்குடியமர்வு விடயம்:

## படைத்தரப்பினரின் அறிக்கை நேற்று புலிகளிடம் கையளிப்பு

கிளிநொச்சி,டிசெ.24

குடாநாட்டில் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் பொதுமக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக படைத்தரப்பு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் சமர்ப்பித்த விசேட அறிக்கை நேற்று மாலை 5 மணியளவில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினரிடம் கையளிக்கப்பட்டது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரிகள் நேற்று கிளிநொச்சியில் புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்தில் இந்த விசேட அறிக்கையை கையளித்தனர்.

இந்த விசேட அறிக்கையை புலிகளின் மூத்த பிரமுகர்கள் நேற்றிரவு ஆராய்ந்தனர் என்றும் -

தமது நிலைப்பாட்டை அவர்கள் இன்று வெளியிடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-3)

## கட்டுகஸ்தோட்டை வீடொன்றில் 15 கிலோ கிளைமோர் குண்டு!
### பொலீஸார் கண்டுபிடிப்பு; வீட்டுக்காரர் கைது!

கண்டி - கட்டுகஸ்தோட்டப் பகுதியில் வீடொன்றிலிருந்து சுமார் 15 கிலோ நிறையுடைய 'கிளைமோர்' வெடிகுண்டு ஒன்று நேற்றுமுன்தினம் கண்டுபிடிக்கப்பட்டது. கட்டுகஸ்தோட்டப் பொலீஸார் இக்குண்டை கண்டுபிடித்திருக்கின்றனர்.

இது தொடர்பாக வீட்டின் உரிமையாளரான முஸ்லிம் வர்த்தகர் ஒருவரைத் தாங்கள் கைது செய்திருப்பதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

வீட்டின் பின்புறத்தில் குண்டு மறைத்து வைக்கப்பட்டிருந்தது எனவும் சந்தேக நபர் விசாரணை செய்யப்பட்டு வருகிறார் எனவும் பொலீஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையே, திகனரஜவெல்ல பகுதியிலுள்ள இரு கடைகளில் அனுமதிப்பத்திரமின்றி வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை வெடிபொருள்களை கண்டி பொலீஸார் கைப்பற்றியிருக்கின்றனர். வர்த்தகர்களில் ஜெலிக்நைட் வெடிமருந்து 270 அடங்கும்.

கடைகளின் உரிமையாளர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.(ம)

## சமாதானப் பேச்சில் ஹக்கீம் பங்குபற்றுவதில் மாற்றமில்லை

கொழும்பு,டிசெ.24

அரசு - புலிகள் சமாதானப் பேச்சுக்களில் அமைச்சர் ரவூக் ஹக்கீம் தொடர்ந்து பங்குபற்றுவார். இதில் எந்த மாற்றமும் இல்லை என்று அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறினார்.

முஸ்லிம் காங்கிரஸுக்குள் தற்போது பிளவு ஏற்பட்டுள்ளது. அமைச்சர் ரவூக் ஹக்கீம் முஸ்லிம்களின் பிரதிநிதியாகக் கலந்துகொள்ளக் கூடாது என்று அதிருப்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்ன? என்று செய்தியாளர்கள் அமைச்சரிடம் வினவினர்.

இக்கேள்விக்கு மேற்கண்டவாறு பதிலளித்த அமைச்சர் பீரிஸ் கட்சிக்குள் ஏற்பட்ட சில உட்பூசல்கள் காரணமாக அமைச்சர் ஹக்கீம் மூன்றாம் சுற்றுப் பேச்சுக்களில் கலந்து கொள்ளாமலே நாடு திரும்பவேண்டியதாயிற்று. எனினும் தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் அடுத்தகட்டப் பேச்சுக்களில் அமைச்சர் ஹக்கீம் கலந்து கொள்வார் என்றும் சொன்னார். (ம)

## காய்ச்சலால் பீடிக்கப்படுவோர் எண்ணிக்கை திடீர் அதிகரிப்பு
### நேற்று மட்டும் 275 பேர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,டிசெ.24

குடாநாட்டில் வைரஸ் காய்ச்சலினால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. யாழ்போதனா வைத்தியசாலை புள்ளி விவரங்களில் இருந்து இது தெரியவந்துள்ளது.

நாளாந்தம் நூற்றுக்கணக்கானவர்கள் யாழ்.ஆஸ்பத்திரியின் வெளிநோயாளர் பிரிவிலும் வார்ட்டுகளில் தங்கியிருந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். காய்ச்சலால் பீடிக்கப்பட்ட சுமார் 275 பேர் நேற்று மட்டும் சிகிச்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# 2002/2003 ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதி வெட்டுப்புள்ளிகள் ('Z' புள்ளித்திட்ட அடிப்படையில்)

| மாவட்டம் | மருத்துவம் | பல் மருத்துவம் | மிருக வைத்தியம் | விவசாயம் | உணவும்-போசணையும் | உயிரியல்-விஞ்ஞானம் | பிரயோகவிஞ்ஞானம் (உயிரியல் விஞ்.) | பொறியியல் (MPR) | பொறியியல் (EM) | பொறியியல் (TM) | நில அளவையியல் | கணனி விஞ்ஞானம் | பௌதிக விஞ்ஞானம் | நில அளவை விஞ்ஞானம் | பிரயோக விஞ்ஞானம் (பௌதிக விஞ்.) | முகாமைத்துவம் | தோட்ட முகாமையும் மதிப்பீடும் | வர்த்தகம் | கலை | கலை(வெகுஜன தொடர்பியல்)* | ஆற்றுகைக்கலை* | கலை(S.A.B)*A | கலை(S.A.B)*B | முகாமைக்கற்கை (S.V.T)*A | முகாமைக்கற்கை (S.V.T)*B | கட்டடக்கலை | வடிவமைப்பு | சட்டம் | தகவல் தொழில் நுட்பம் | முகாமையும் தகவல் தொழிநு. | பொதுமுகாமை (நிர்வாகம்) | தொடர்பாடல் கற்கை* | நகர நாட்டுத்திட்டம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 1.9001 | 1.8547 | 1.7960 | 1.4313 | 1.4561 | 1.5497 | 1.3525 | 1.8948 | 1.7467 | 1.8224 | 1.4498 | 1.7813 | 1.2884 | 1.4235 | 1.1825 | 1.6103 | 1.5749 | 1.4830 | 1.2530 | NQC | 1.2046 | 1.2611 | 1.4054 | 1.4555 | 1.4371 | 1.0993 | 1.0968 | 1.7764 | 1.8058 | 1.5404 | 1.5997 | 1.3024 | 1.5631 |
| கம்பஹா | 1.6544 | 1.6298 | 1.5876 | 1.2018 | 1.3204 | 1.3637 | 1.1784 | 1.5593 | 1.5054 | 1.4873 | 0.8427 | 1.4891 | 1.0835 | 1.3068 | 1.0208 | 1.5484 | 1.5390 | 1.4755 | 1.2300 | 1.1799 | 1.2046 | 1.2611 | 1.4054 | 1.4413 | 1.4302 | 0.7543 | 0.7211 | 1.7614 | 1.5333 | 1.4072 | 1.5338 | 1.3024 | 1.4006 |
| களுத்துறை | 1.6091 | 1.5936 | 1.5618 | 1.1940 | 1.3352 | 1.3293 | 1.1752 | 1.5888 | 1.5352 | 1.5794 | 1.4237 | 1.5651 | 1.1742 | 1.4941 | 1.1034 | 1.5479 | 1.5432 | 1.4666 | 1.2679 | 1.1799 | 1.2046 | 1.2611 | 1.4054 | 1.4413 | 1.4241 | 0.5529 | 0.4395 | 1.8023 | 1.5395 | 1.2428 | 1.5432 | 1.3024 | 1.4613 |
| மாத்தளை | 1.4125 | 1.3625 | 1.4019 | 1.0284 | 1.1204 | 0.9042 | 0.8696 | 1.4892 | 1.4447 | 1.4873 | NQC | 1.4581 | 0.9442 | 1.3857 | 0.8754 | 1.3323 | 1.5478 | 1.3399 | 1.2679 | NQC | NQC | 1.2611 | 1.4054 | 1.2981 | 1.2923 | 0.6754 | NQC | 1.7239 | 1.3464 | 1.2821 | 1.5278 | NQC | 1.3135 |
| கண்டி | 1.8000 | 1.7807 | 1.7528 | 1.3425 | 1.3901 | 1.3991 | 1.3391 | 1.7562 | 1.6600 | 1.6862 | 1.1036 | 1.7074 | 1.2069 | 1.3862 | 1.1624 | 1.5220 | 1.5178 | 1.4566 | 1.2679 | 1.1799 | 1.2046 | 1.2611 | 1.4054 | 1.4359 | 1.4276 | 0.8778 | 0.9058 | 1.7522 | 1.7095 | 1.4119 | 1.5437 | 1.3024 | 1.5594 |
| நுவரெலியா | 0.8629 | 0.8191 | 0.7791 | 0.4982 | 0.6274 | 0.3984 | 0.3455 | 0.7767 | 0.7074 | 0.6729 | NQC | 0.6008 | 0.4096 | 0.4974 | NQC | 1.2116 | 1.5142 | 1.1540 | 1.1691 | NQC | NQC | 1.2611 | 1.4054 | 1.1228 | 1.1116 | NQC | NQC | 1.4237 | 0.6207 | NQC | 1.5943 | NQC | 1.1181 |
| காலி | 1.8236 | 1.8132 | 1.7929 | 1.3702 | 1.3608 | 1.3783 | 1.3483 | 1.8685 | 1.7570 | 1.8357 | 1.5190 | 1.7569 | 1.2412 | 1.5192 | 1.1969 | 1.5696 | 1.5632 | 1.4771 | 1.2679 | 1.1799 | 1.2046 | 1.2611 | 1.4054 | 1.4513 | 1.4312 | 1.0574 | 1.0572 | 1.8105 | 1.8196 | 1.4579 | 1.5643 | 1.3024 | 1.6168 |
| மாத்தறை | 1.8802 | 1.8477 | 1.7969 | 1.3792 | 1.4812 | 1.2942 | 1.2700 | 1.8583 | 1.7604 | 1.7996 | 1.3515 | 1.7818 | 1.2366 | 1.4911 | 1.2017 | 1.6097 | 1.5696 | 1.4808 | 1.2679 | 1.1799 | 1.2046 | 1.2611 | 1.4054 | 1.4572 | 1.4360 | 1.1650 | 1.0916 | 1.7987 | 1.7796 | 1.5826 | 1.5997 | 1.3024 | 1.5562 |
| அம்பாந்தோட்டை | 1.6145 | 1.6066 | 1.6047 | 1.3481 | 1.3877 | 1.2040 | 1.1971 | 1.6338 | 1.5334 | 1.6089 | 1.5501 | 1.6022 | 0.9998 | 1.5204 | 0.9651 | 1.5279 | 1.5526 | 1.4396 | 1.2679 | NQC | 1.2046 | 1.2611 | 1.4054 | 1.4360 | 1.4207 | 0.7899 | NQC | 1.5723 | 1.7256 | 1.5997 | 1.5232 | 1.3024 | 1.4527 |
| யாழ்ப்பாணம் | 1.7853 | 1.7767 | 1.7519 | 1.3489 | 1.3572 | 1.1996 | 1.1712 | 1.8293 | 1.7602 | 1.8261 | 1.5504 | 1.7867 | 1.2673 | 1.5240 | 1.1890 | 1.5214 | 1.3983 | 1.4202 | 1.2679 | NQC | NQC | 1.2611 | 1.4054 | 1.4137 | 1.4054 | NQC | NQC | 1.5365 | 1.7531 | NQC | 1.4512 | 1.3024 | 1.3736 |
| கிளிநொச்சி | 1.3893 | 1.3137 | 1.3003 | 0.8597 | 0.8634 | 0.6715 | 0.6243 | 1.4480 | 0.9917 | 1.3005 | 0.8139 | 1.0783 | 0.5221 | 0.9118 | 0.5186 | 1.2942 | 1.1535 | 1.1646 | 1.2679 | NQC | NQC | 1.2611 | 1.4054 | 1.1162 | 1.2652 | NQC | NQC | 1.1249 | 1.2923 | NQC | 1.1127 | NQC | 0.5519 |
| மன்னார் | 0.9191 | 0.8444 | 0.6642 | 0.4465 | 0.4110 | 0.4005 | NQC | 1.1755 | 1.0014 | 1.0917 | NQC | 0.8460 | 0.5894 | 0.4281 | NQC | 1.1798 | 0.8778 | 0.8931 | 1.2340 | NQC | NQC | 1.2611 | 1.4054 | 0.8837 | 1.2007 | NQC | NQC | 1.6038 | 0.7766 | NQC | 0.8825 | 1.3024 | NQC |
| முல்லைத்தீவு | 1.4555 | 1.4113 | 1.4047 | 0.7500 | 0.7106 | 0.5792 | 0.5653 | 1.6911 | 1.6127 | 1.6668 | NQC | 1.5928 | 0.6122 | 1.5139 | 0.5514 | 1.4581 | 1.4042 | 1.4085 | 1.2679 | NQC | NQC | 1.2611 | 1.4054 | 1.3997 | 1.3815 | NQC | NQC | 1.3440 | 1.4059 | NQC | 1.4184 | NQC | 0.7904 |
| வவுனியா | 1.6450 | 1.6424 | 1.5880 | 1.3346 | 1.4876 | 1.1920 | 1.1835 | 1.7188 | 1.5545 | 1.6006 | 0.8785 | 1.4368 | 0.9701 | 1.4083 | 0.9144 | 1.3783 | 1.4049 | 1.3218 | 1.2679 | NQC | NQC | 1.2611 | 1.4054 | 1.2682 | 1.2522 | NQC | NQC | 1.8558 | 1.3873 | NQC | 1.4702 | NQC | 1.2435 |
| திருகோணமலை | 1.4666 | 1.4603 | 1.4294 | 1.1422 | 1.2691 | 0.7702 | 0.7547 | 1.2579 | 1.1886 | 1.1792 | NQC | 1.1406 | 0.6183 | 1.0907 | 0.4968 | 1.1339 | 1.1439 | 1.0621 | 1.1680 | NQC | NQC | 1.2611 | 1.4054 | 0.9927 | 1.1626 | NQC | NQC | 1.2146 | 1.3635 | NQC | 1.2828 | 1.3024 | 1.0888 |
| மட்டக்களப்பு | 1.4726 | 1.4486 | 1.3586 | 1.1783 | 1.3579 | 1.0740 | 1.0694 | 1.2740 | 1.2511 | 1.2614 | NQC | 1.1724 | 0.8270 | 1.1379 | 0.7921 | 1.1762 | 1.2300 | 1.0992 | 1.2679 | NQC | NQC | 1.2611 | 1.4054 | 1.0752 | 1.2597 | NQC | NQC | 1.5086 | 1.2332 | 1.2105 | 1.1381 | NQC | 1.0131 |
| அம்பாறை | 1.4946 | 1.4831 | 1.4346 | 1.2444 | 1.4193 | 0.9473 | 1.1266 | 1.3131 | 1.2838 | 1.2642 | 1.1851 | 1.1869 | 0.7911 | 1.1557 | 1.1266 | 1.4359 | 1.4142 | 1.3065 | 1.2679 | NQC | NQC | 1.2611 | 1.4054 | 1.2981 | 1.2870 | NQC | NQC | 1.4443 | 1.3089 | NQC | 1.4312 | NQC | 1.3734 |
| புத்தளம் | 1.5876 | 1.5348 | 1.5167 | 1.1814 | 1.2778 | 1.0828 | 0.9788 | 1.5237 | 1.5073 | 1.4972 | NQC | 1.4563 | 0.9684 | 1.3705 | 0.9439 | 1.3229 | 1.5526 | 1.2457 | 1.2679 | NQC | NQC | 1.2611 | 1.4054 | 1.2252 | 1.2160 | 0.7392 | 0.8786 | 1.7800 | 1.2938 | 0.9798 | 1.3170 | NQC | 1.2158 |
| குருநாகல் | 1.7477 | 1.7357 | 1.7315 | 1.2905 | 1.2940 | 1.3654 | 1.2752 | 1.6812 | 1.6695 | 1.6698 | 1.3017 | 1.6618 | 1.1801 | 1.4859 | 1.1361 | 1.4914 | 1.4972 | 1.4543 | 1.2679 | 1.1799 | 1.2046 | 1.2611 | 1.4054 | 1.4360 | 1.4207 | 0.7286 | 1.1558 | 1.7584 | 1.6554 | 1.4001 | 1.5737 | 1.3024 | 1.5018 |
| அநுராதபுரம் | 1.5757 | 1.5756 | 1.5315 | 1.2060 | 1.1301 | 1.0609 | 1.0385 | 1.5205 | 1.4825 | 1.5024 | 1.4728 | 1.4323 | 0.9163 | 1.3306 | 0.8640 | 1.3854 | 1.5125 | 1.2923 | 1.2679 | 1.1799 | NQC | 1.2611 | 1.4054 | 1.2864 | 1.2570 | 0.8649 | 0.4600 | 1.6410 | 1.6043 | 1.0673 | 1.5079 | NQC | 1.6193 |
| பொலநறுவை | 1.2086 | 1.2017 | 1.2095 | 0.8949 | 0.9737 | 0.7899 | 0.6699 | 0.8766 | 0.6924 | 0.8344 | NQC | 0.7795 | 0.4024 | 0.4447 | NQC | 1.3224 | 1.1698 | 1.2205 | 1.1863 | NQC | NQC | 1.2611 | 1.4054 | 1.1904 | 1.1785 | NQC | NQC | 1.8251 | 0.8277 | 0.5488 | 1.4054 | 1.3024 | 0.9510 |
| பதுளை | 1.4415 | 1.4243 | 1.3904 | 1.1320 | 1.1311 | 0.8698 | 0.7866 | 1.3909 | 1.3235 | 1.3432 | 0.4629 | 1.2965 | 0.8178 | 1.2903 | 0.7786 | 1.3648 | 1.5437 | 1.2759 | 1.2679 | NQC | 1.2046 | 1.2611 | 1.4054 | 1.2706 | 1.2386 | NQC | NQC | 1.6661 | 1.3285 | 1.2771 | 1.5362 | NQC | 1.4287 |
| மொனறாகலை | 1.0450 | 1.0417 | 0.9892 | 0.7924 | 0.8835 | 0.6202 | 0.5562 | 0.7676 | 0.7564 | 0.7387 | NQC | 0.7656 | 0.4053 | 0.4762 | NQC | 1.3335 | 1.3330 | 1.2311 | 1.2679 | 1.1799 | NQC | 1.2611 | 1.4054 | 1.2575 | 1.2505 | NQC | NQC | 1.6260 | 0.7425 | NQC | 1.3330 | NQC | 0.9713 |
| கேகாலை | 1.6063 | 1.5912 | 1.5678 | 1.2617 | 1.3076 | 1.1803 | 1.1676 | 1.5988 | 1.5877 | 1.5976 | 1.3222 | 1.5823 | 1.0885 | 1.2608 | 1.0371 | 1.5727 | 1.5649 | 1.4773 | 1.2679 | 1.1799 | NQC | 1.2611 | 1.4054 | 1.4413 | 1.4355 | NQC | 0.8860 | 1.6067 | 1.5069 | 1.3317 | 1.5637 | 1.3024 | 1.5199 |
| இரத்தினபுரி | 1.5742 | 1.5577 | 1.5364 | 1.2259 | 1.2130 | 1.1769 | 1.1358 | 1.5780 | 1.5452 | 1.5432 | 1.0213 | 1.6255 | 1.0875 | 1.5073 | 0.9961 | 1.5131 | 1.5637 | 1.4672 | 1.2679 | 1.1799 | 1.2046 | 1.2611 | 1.4054 | 1.4472 | 1.4360 | NQC | 0.6895 | 1.7547 | 1.7142 | 1.3907 | 1.5485 | 1.3024 | 1.3954 |

மேற்படி அட்டவணை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் நேற்று பத்திரிகைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. எனினும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தனது இணையத்தளத்தில் WWW.ugc.ac.lk என்ற முகவரியில் மாவட்ட ரீதியில் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி விவரத்தை ('Z' புள்ளி) வெளியிட்டது. முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை மாவட்டங்களுக்குரிய வெட்டுப்புள்ளி இணையத்தளத்தில் மாறுபடக் காணப்பட்டன. மானிய ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட மூல அட்டவணைக்கும் அதன் இணையத்தளத்தில் மாவட்ட ரீதியில் வெளியான வெட்டுப்புள்ளிக்கும் இடையில் பெரிய வேறுபாடுகள் இருப்பது குறிப்பிடத்தக்கது. இணையத்தளத்தில் மேற்படி மூன்று மாவட்டங்களுக்கும் குறிப்பிடப்பட்டுள்ள வெட்டுப்புள்ளி விபரங்கள் வருமாறு:

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முல்லைத்தீவு | 1.1744 | 1.1743 | 1.7514 | 1.5157 | 1.0046 | 0.7418 | 0.6821 | 1.7069 | 1.5603 | 1.6986 | 1.4134 | 1.6912 | 1.1684 | 1.4866 | 1.1433 | 1.6352 | 1.3341 | 1.4258 | 1.2405 | NQC | NQC | 1.2273 | NQC | 1.4242 | 1.3793 | NQC | NQC | 1.1649 | NQC | NQC | 1.5873 | NQC | |
| திருகோணமலை | 1.3479 | 1.3062 | 1.3435 | 1.2129 | 1.1186 | 0.8815 | 0.8546 | 1.1614 | 1.1181 | 1.1322 | 1.0121 | 1.0846 | 0.5652 | 1.0546 | 0.5138 | 11861 | 1.3138 | 1.0344 | 1.2399 | NQC | NQC | NQC | NQC | 1.1850 | 1.1681 | NQC | NQC | 1.5108 | 1.1233 | NQC | 1.2679 | NQC | |
| வவுனியா | 1.7940 | 1.7542 | 1.7365 | 1.2676 | 1.4249 | 1.1915 | 1.1743 | 1.7611 | 1.5214 | 1.5283 | 1.3956 | 1.4741 | 1.0853 | 1.2616 | 1.0579 | 1.3908 | 1.3744 | 1.3798 | 1.2405 | NQC | NQC | 1.2273 | NQC | 1.3598 | 1.3541 | NQC | NQC | 1.4251 | 1.3620 | NQC | 1.3818 | 1.1500 | |

NQC - தகுதியானவர்கள் இல்லை
* - அகில இலங்கை ரீதியில் நூறு வீதம் தகுதி அடிப்படையில் தெரிவு.

முகாமைத்துவ கற்கைநெறி (SVT) A - வர்த்தகப்பிரிவு
B - சகலபிரிவுகளும்

கலை (SAB) A - கலைப்பிரிவு
B - சகல பிரிவுகளும்

### ஆயுதசோதனையில் சி.ஐ.ஏயைப் பங்குபற்றக் கோரும்

# ஈராக்கின் அழைப்பினை அமெரிக்கா நிராகரித்தது

லண்டன்,டிசெ.24

ஐ.நா.ஆயுதக் கண்காணிப்பாளர்களுக்கு உதவ அமெரிக்கப் புலனாய்வுத்துறை அதிகாரிகளை அனுமதிக்கத் தான் தயாராக உள்ளதாக ஈராக அறிவித்தது. ஆயினும், இது ஈராக்கின் மற்றொரு நாடகம் என்று கூறி அமெரிக்கா இதனை நிராகரித்து விட்டது.

ஈராக்கின் ஆயுத உற்பத்தி குறித்து ஐநாவிடம் கையளிக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக அமெரிக்காவும் பிரிட்டனும் எழுப்பும் எவ்விதக் கேள்விக்கும பதிலளிக்க ஈராக் தயாராக உள்ளதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈராக அதிபரின் ஆலோசகர் ஜெனரல் அமிர் அல்சாமி அறிவித்துள்ளார்.

கைவசமுள்ள அனைத்துத் தகவல்களையும் அந்நாடுகளுக்குத் தர ஈராக் தயாராக உள்ளதாகவும்-

அமெரிக்க மத்திய புலனாய்வுத் துறையான - சி.ஐ.ஏயின் பிரதிநிதிகள் ஈராக்கில் உள்ள சந்தேகத்துக்குரிய இடங்களில் ஆயுதக் கண்காணிப்பாளருக்கு உதவியாக இப ஏக அனுமதிப்பதாகவும் -

அவர் மேலும் தெரிவித் திருந்தார்.

ஆனால், அமெரிக்க அதிகாரிகள் ஈராக்கின் இந்த அழைப்பை நிராகரித்து விட்டனர். அதிபர் பதவியிலிருந்து சதாம் ஹுசைனை அகற்றி பேரழிவு ஆயுதங்களை ஈராக்கிலிருந்து அப்புறப்படுத்தும் இறுதிக் கட்டத்தில் நாம் உள்ளோம். இந்த வேளையில் ஈராக்கின் இந்த நாடகத்தில் சிக்க மாட்டோம் என்று வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இது ஒருபுறமிருக்க, கடந்த 25 நாள்களாக ஈராக்கில் பேரழிவு ஆயுதங்களை தேடி வரும் ஐநா ஆயுதப் பரிசோதகர்கள் தமது பணியைத் தொடர்கின்றனர்.

ஈராக்கின் விண்வெளி ஆய்வு மையம், அல்பட்டாணி நிறுவனம் உட்பட ஆறு இடங்களில் கடைசியாக ஆயுதக் கண்காணிப்பாளர்கள் சோதனை நடத்தினர்.

இதேவேளை, ஈராக் மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள வசதியாக அப்பிரதேசத்தில் அமெரிக்கா தனது இராணுவக் கட்டமைப்பைத் தொடர்ந்து பெருக்கி வருகிறது. (ஒ)



ஆயுதப் பரிசோதனையில் ஐ.நா. கண்காணிப்பாளர்.

# ஈராக் மீதான போர் பெப்ரவரியில் நடக்கும்

## ரஷ்ய ஜோதிடர் கணிப்பு

மொஸ்கோ,டிசெ.24

அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்கும் என்று ரஷ்ய ஜோதிடர் பாவெல் குளோபா கணித்துள்ளார்.

இந்தப் போரில் ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் கொல்லப்படமாட்டார் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியுள்ளது:

ஈராக் மீது போர் தொடுப்பதற்கான இறுதி முடிவை எதிர்வரும் ஜனவரி 4 அல்லது 5 ஆம் திகதிகளில் அமெரிக்கா எடுக்கும். பின்னர் பெப்ரவரி 18 ஆம் திகதியிலிருந்து 20 ஆம் திகதிக்குள ஈராக் மீது போர் தொடுக்கும். சூரியன் கும்ப ராசியிலிருந்து மீன் ராசிக்குச் செல்லும் இந்த நேரத்தில் போர் நடக்கும். இந்தப் போரில் சதாம ஹுசைன் கொல்லப்படமாட்டார். இவரது சாயலில் உள்ள ஒருவர் இறப்பார். சதாம் ஹுசைன் தலைமறைவாகி விடுவார் என்றார் அவர். (ஒ)

# சதாம் ஹுசைனை கைவிடும்படி ஈராக் படைகளுக்குக் கோரிக்கை

## அமெரிக்கா விடுத்தது

வாஷிங்ரன்,டிசெ.24

ஈராக் நாட்டின் தென்பகுதியில் அமெரிக்க விமானங்கள் துண்டுப்பிரசுரங்களை வீசின. அதிபர் சதாம் ஹுசைனைப் புறக்கணிக்கும்படி ஈராக் இராணுவத்தைக் கேட்டுக்கொள்ளும் வாசகங்கள் அதில் இடம்பெற்று இருந்தன.

எதிர்காலத்தில் தான் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டால், ஈராக் இராணுவ வீரர்களின் ஆதரவு சதாம் ஹுசைனுக்குக் கிடைக்காமல் தடுக்கும் நோக்கத்துடனேயே அமெரிக்கா ஈராக் நாட்டின் தென்பகுதியில் இந்தத் துண்டுப்பிரசுரங்களை வீசியுள்ளதாகக் கருதப்படுகிறது.

இதில் சதாம் ஹுசைனின் கட்டளைகளை நிறைவேற்றுவதைக் கைவிடும்படியும் சதாமை விட்டு விலகும்படியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆயுள் கைதி அறிவித்த 24 கோடி ரூபா பரிசு

அபுதாபி,டிசெ.24

பிரிட்டனைச் சேர்ந்தவர் ஜெர்மி பம்பர். 41 வயதான இவர் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருக்கிறார். அவரது வளர்ப்புப் பெற்றோர், தங்கை, 2 மகள்கள் என 5 பேரைக் கொலை செய்ததற்காக அவருக்கு இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.

தண்டனையை எதிர்த்து மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார். அந்த முறையீடு தோல்வி அடைந்தது. இதைத் தொடர்ந்து அவர் தன் இணையத் தளத்தில் 'என் விடுதலைக்கு உதவும் வகையில் நான் நிரபராதி என நிரூபிக்கத் தேவையான தகவலை எனக்கு யாராவது கொடுத்தால் அவர்களுக்கு 24 கோடி ரூபா பரிசு தருவேன்' என்று அறிவித்து இருக்கிறார். (ஒ)

# ஈரானிய அதிபர் கதாமி பாகிஸ்தானுக்கு விஜயம்



தெஹ்ரான்,டிசெ.24

ஈரான் அதிபர் முகமட் கதாமி பாகிஸ்தானுக்கு மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சி அகற்றப்பட்ட பின்னர் ஈரானியத் தலைவர் ஒருவர் பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொள்வதும் -

அதிபர் கதாமி பாகிஸ்தான் செல்வதும் -

இதுவே முதற்றடவையாகும். இந்த விஜயத்தின்போது பிரதேச நிலைமை, குறிப்பாக ஈராக் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள், இந்திய - பாகிஸ்தானிய முறுகல் நிலை போன்ற விடயங்கள் தொடர்பாக இரு தலைவர்களும் பேச்சு நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தத்தமது பிரதேசங்களில் அமெரிக்காவின் செல்வாக்கு வளர்வது குறித்து இரு நாடுகளும் நேரெதிரான கருத்துக்களைக் கொண்டுள்ளன.

ஆப்கான் மீதான இராணுவ நடவடிக்கைக்கு அமெரிக்காவின் பக்கம் நின்று உதவியளித்து வருகிறது பாகிஸ்தான். இதேவேளை 'சாத்தானின அச்சு' என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷால் வர்ணிக்கப்பட்ட நாடு ஈரான்.

இப்படிப்பட்ட சூழலில்

ஈரானிய அதிபர் கதாமியின் பாகிஸ்தானிய விஜயம் பலவித ஊகங்களையும் சந்தேகங்களையும் உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

### இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு காரணமாக

# பலஸ்தீனத் தேர்தல்களை பிற்போட அரபாத் திட்டம்

ஜெருசலேம்,டிசெ.24

அடுத்த மாதம் நடைபெறவுள்ள பலஸ்தீன அதிகார சபைத் தேர்தலை பலஸ்தீனத்தலைமை ஒத்திவைக்கலாம் என்று பலஸ்தீன வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் ஜனவரி 20 ஆம் திகதி பலஸ்தீனப் பிரதேசத்தில் தேர்தலை நடத்துவதாக பலஸ்தீனத் தலைவர் யஸர் அரபாத் வாக்குறுதியளித்திருந்தார். பலஸ்தீனத் தலைமைப் பொறுப்பிலிருந்து யஸீர் அரபாத்தை ஓரம் கட்டவே பலஸ்தீனத் தேர்தலை நடததும்படி இஸ்ரேலும், அதன் நட்பு நாடான அமெரிக்காவும் வற்புறுத்துவதாக அப்போது பலஸ்தீன வட்டாரங்கள் குற்றஞ்சாட்டி வந்தன. ஆயினும், திட்டமிட்டபடி தேர்தலை நடத்தப் போவதாக பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் உறுதி தெரிவித்து வந்தார்.

இந்த நிலையில், சர்வதேச செய்தி ஊடகமொன்றுக்கு பேட்டியளித்த பலஸ்தீன அமைச்சர் சையீப்ரெகட், 'எதிர்வரும் ஜனவரி, 20 ஆம் திகதி தேர்தலை நடத்துவது முடியாத காரியம்' என்று தெரிவித்தார். இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கை முடிவுக்கு வராத வரையிலும் பலஸ்தீனப் பிரதேசத்தில் தேர்தலை நடத்த முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது பலஸ்தீன நிர்வாகத்தை புனரமைக்கும் பணிகளே நடந்து வருகின்றன. ஆகவே, தேர்தல் வாக்களிப்பு ஜனவரி மாதம் நடைபெறுவதை எவரும் எதிர்பார்க்கவில்லை என்று ஜெருசலேமுக்கான பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

கடந்த மே மாதம் சர்வதேச அழுத்தம் காரணமாக, தனது நிர்வாகத்தைப புனரமைக்கவும் அதிபர் பதவி மற்றும் உறுப்பினர் பதவிகளுக்கான தேர்தல்களை நடத்தவும் தான் அளித்த வாக்குறுதியை இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கையைக் காரணம் காட்டி அரபாத் கைவிட்டிருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

பலஸ்தீன நகரங்களிலும் கிராமங்களிலும் இஸ்ரேலிய இராணுவம் ஊரடங்குச் சட்டத்தை பிறப்பித்துள்ள நிலையில் தேர்தலை எப்படி நடத்துவது என்று அரபாத்துக்கு நெருக்கமான அமைச்சர் எரகாத் கேட்டுள்ளார். இஸ்ரேலிய இராணுவம் பலஸ்தீனப் பிரதேசத்தை ஆக்கிரமித்து படுகொலைகள், கைதுகள், நாடு கடத்தல்கள் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நிலையில் வாக்காளர் பதிவு போன்ற பணிகளில் பலஸ்தீனர்கள் எப்படி ஈடுபட முடியுமென்றும் அவர் கேள்வி எழுப்பினார். (ஒ)



ஆலோசனைக்கூட்டத்தில் அரபாத்.

### வானில் பறந்த விமானத்தில்

# மிரட்டிய பயணிகள் அபுதாபியில் கைது!

அபுதாபி,டிசெ.24

விமானத்தைக் குண்டு வைத்துத் தகர்க்கப் போவதாக மிரட்டிய இரண்டு பயணிகள் கைது செய்யப்பட்டனர். 2 பேரும் லிபியா நாட்டைச் சேர்ந்தவர்கள்.

ஜோர்டான் நாட்டின் தலைநகரான அம்மானில் இருந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தலைநகரான அபுதாபி வழியாக டுபாய்க்கு புறப்பட்ட விமானத்தில் அவர்கள் பயணஞ்செய்தனர். விமானப் பணிப்பெண்களிடம் 'நாங்கள் குண்டு வைத்து இருக்கிறோம். அதை வெடிக்கச் செய்து விமானத்தை தகர்க்கப் போகிறோம்' எனத் தெரிவித்தனர். விமானத்தில் பயணம செய்த இராணுவ வீரர்களிடம் பணிப்பெண்கள் இது குறித்து முறையிட்டனர். உடனே அவர்கள் அந்தப் பயணிகளிடம் சோதனை நடத்தினர். அப்போது அவர்களிடம் குண்டு எதுவும் இல்லை என்பது தெரிய வந்தது.

விமானம் அபுதாபியில் இறங்கியதும், அவர்கள் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ஒ)

# அமெரிக்கப் பொருளாதாரம் சீரடைய இனி வாய்ப்பில்லை!

## பன்னாட்டு நிறுவனங்கள் அச்சம்

நியூயோர்க்,டிசெ.24

அமெரிக்காவின் பொருளாதாரம் சீரடையும் என்ற நம்பிக்கையை அமெரிக்காவில் உள்ள பன்னாட்டு நிறுவனங்கள் இழந்து வருகின்றன.

அமெரிக்க நிறுவனம் ஒன்று நடத்திய ஆய்வு ஒன்றில் இது தெரிய வந்துள்ளது.

2001 செப்ரெம்பரில் தீவிரவாதிகள் உலக வர்த்தக நிறுவனம் மீது நடததிய தாக்குதலை அடுத்து அமெரிக்கப் பொருளாதாரம் சீர்குலைந் தது. தற்போது அது மெல்ல மெல்ல சீரடைந்து வருகிறது. இந்த நிலையில் அமெரிக்காவின் மீது மேலும் தாக்குதல் நடைபெறலாம் என்ற அச்சத்தினாலும் ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுப்பதற்கான வாய்ப்பு உள்ளது என்பதாலும் அந்நாட்டின் பொருளாதாரம் சீரடைவதற்கான வாய்ப்புக் குறித்து அந்த நிறுவனங்கள் நம்பிக்கை இழந்துள்ளன என்று ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக அந்த நிறுவனங்கள் பல புதிய திட்டங்களில் முதலீடு செய்வதைக் குறைத்துக் கொண்டுள்ளன.

கடந்த அரையாண்டின் முடிவில் அடுத்த 12 மாதங்களில் அமெரிக்காவின் பொருளாதாரம் மேம்படும் என்று பெரிய நிறுவனங்களின் மூத்த நிர்வாகிகளில் 69 சதவீதமானோர் நம்பிக்கை தெரிவித்திருந்தனர். ஆனால், 3ஆவது காலாண்டின் முடிவில் 48 வீதமானோரே அந்த நம்பிக்கையோடு உள்ளனர்.

அமெரிக்கப் பொருளாதாரத்தில் தொடர்ந்து நிலையற்ற நிலை நிலவிவருகிறது என்று மூத்த நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர் என்றும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதன் முறையாக யாழ்நகரில்...

நில்கமலின்... கிலி கிலி மெஜிக் மாயா ஜால நிகழ்ச்சி!




பல சாதனைகள் புரிந்த
பேராசிரியர்
சங்கர்
சங்கர் ஜூனியர்
கலந்து கலக்கும்
மாயா ஜால நிகழச்சி

இடம்:
யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம்: இன்று (24-12-2002) செவ்வாய்க்கிழமை
1030, 3.30, 6.30 மூன்று காட்சிகள்

டிக்கட் கிடைக்கும் இடங்கள்:- மெற்றா பர்னிசர்ஸ், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
அம்பிகை களஞ்சியம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். சீமாட்டி, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T. சங்கரப்பிள்ளை அன் சன்ஸ், நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
திரோஷா பர்னிசர்ஸ், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மங்களா பர்னிசர்ஸ், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மாருதி பர்னிசர்ஸ், ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
கருணா பர்னிசர்ஸ், K. K. S வீதி, யாழ்ப்பாணம். ராஜன் சைக்கிள் வர்க்ஸ், பருத்தித்துறை.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர்

## இராசரத்தினம் மகேந்திரராஜா

தோற்றம்
17-12-1944

மறைவு
04-01-2002

திதி
25-12-2002

வேவில் வீதி,
வல்வெட்டி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
- குடும்பத்தினர்.

(12032)

உதயன்

# உள்ளூராட்சி சபைகளை காலாவதியாக விடுக!

"யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகள், நகரசபைகள் மற்றும் யாழ்.மாநகரசபை போன்ற உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக்காலத்தை மேலும் நீடித்துவிடாதீர்கள். அவற்றின் பதவிக்காலம் காலாவதியாக விட்டுவிடுங்கள்."

- பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை இவ்வாறு கடிதம்மூலம் கோரியிருக்கின்றார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட எம்.பியும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவருமான அ.விநாயகமூர்த்தி.

யாழ்.குடாநாட்டு உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் ஏற்கனவே கடந்த ஆண்டு பெப்ரவரி மாதமே காலாவதியாக வேண்டியிருந்தது. ஆனால், பிரதமர் ரணிலின் அரசு அதனை மேலும் ஓராண்டு நீடித்தது. மீண்டும் அது இந்த பெப்ரவரியில் காலாவதியாகின்றது. அதனை மேலும் அரசு நீடிக்குமா என்ற சந்தேகம் தற்போது எழுந்துள்ளது.

1998 ஜனவரியில் இந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்பட்டன. இந்தத் தேர்தல்களில் ஜனநாயகம் கடைப்பிடிக்கப்பட்ட 'சீத்துவம்' எப்படி அமைந்தது என்பது உலகுக்கே தெரிந்த இரகசியம்.

1994, 2000, 2001 ஆகிய ஆண்டுகளில் யாழ். குடாநாட்டில் பொதுத் தேர்தல்கள் எவ்வாறு நடந்தன, ஜனநாயகத்தின் பெயரைக் கொண்டவர்கள் அதனைத் தேர்தலின்போது குழி தோண்டிப் புதைத்து, மக்களின் வாக்குரிமையைக் கேலிக்குரியதாக்கி எவ்வாறு பதவிக் கதிரைகளை எட்டிப் பிடித்தார்கள் என்பதெல்லாம் தெரிந்தவைதான்.

இந்த உண்மைகளை அம்பலப்படுத்த முயன்றதற்காகப் பத்திரிகைகளும் பத்திரிகையாளர்களும் எத்தகைய இன்னல்களுக்கு உள்ளாயினர் என்பதற்கு பத்திரிகையாளர் நிமலராஜனுக்கு ஏற்பட்ட கதி ஓர் உதாரணம்.

இந்தப் பொதுத் தேர்தலின்போது நடந்த முறைகேடுகள், மேற்படி உள்ளூராட்சி சபைத் தேர்தல்களிலும் அட்சரம் பிசகாமல் நடந்தேறின. அத்தகைய குறுக்கு வழிகளில் பதவிக் கதிரைகளை எட்டியோரின் கைகளிலேயே பெரும்பாலான சபைகள் இருக்கின்றன.

குடாநாட்டின் இன்றைய அரசியல் குழப்பநிலைக்கும் தற்போதைய சமாதான முயற்சிகளுக்கும்கூட முட்டுக்கட்டையாக இந்தச் சபைகள் இருப்பதைச் சுட்டிக்காட்டியே ஆகவேண்டும்.

யாழ்.மாநகரசபையிலும் வலிகாமம் வடக்கு பிரதேச சபையிலும் மட்டும் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி, இரண்டு சபைகளையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றது. வல்வெட்டித்துறை நகரசபை ரெலோவிடம். எஞ்சிய சபைகள் அனைத்தும் ஈ.பி.டி.பி. மற்றும் புளொட்டின் கட்டுப்பாட்டில்.

ஈ.பி.டி.பி. பத்துக்கும் அதிகமான சபைகளை வைத்துக்கொண்டு, அப்பிரதேசங்களில் நடத்தும் அரசியல் தோரணைதான் பல குழப்பங்களுக்கு இன்று அடிப்படை என்பது இன்று வெளிப்படையாகத் தெரியவந்துவிட்டது.

கடந்த காலங்களில் ஆயுதங்களை வைத்துக்கொண்டு ஈ.பி.டி.பி. மேற்கொண்ட அராஜக நடவடிக்கைகளினால்தான் நெடுந்தீவு மக்கள், வாய்ப்புக் கிடைத்தபோது அவர்களை அங்கிருந்து விரட்டினார்கள். இப்போது கடற்படை மற்றும் பொலீஸின் பாதுகாப்போடு அவர்கள் மீண்டும் அங்கு சென்றுள்ளபோதும் அதைப் பொதுமக்கள் எதிர்ப்பதும் இந்தக் காரணத்தினால்தான்.

ஆனால், நெடுந்தீவில் தாங்கள் தொடர்ந்து நிலைகொண்டு படையினரின் பாதுகாப்போடு இருப்பதற்கு, ஈ.பி.டி.பி. தரப்பில் கூறப்படும் காரணங்களில் - நியாயங்களில் - முக்கியமானது தாங்கள் கட்டுப்பாட்டில் நெடுந்தீவு பிரதேசசபை உள்ளதால் அதை நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு தமக்கு உண்டு என்பதாகும்.

தமது கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேச சபைகளுக்கு அருகில் நிலைகொண்டிருப்பதற்கு, சட்ட ரீதியாகப் படையினரின் பாதுகாப்பு உதவியை அவர்கள் பெற்றுக்கொள்கின்றார்கள். உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர் என்ற முறையில் அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வசதியை பொலீஸாரும் படையினரும் வழங்கவேண்டியவர்களாகின்றனர்.

கடந்த பெப்ரவரியில் இந்தச் சபைகளின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டபோது அதனைத் தடுத்து நிறுத்தத் தமிழர்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் தவறிவிட்டனர்.

இப்போது சமாதானப் பேச்சு மேசையில் அதனை இலகுவாகச் செய்யக்கூடிய வாய்ப்புக் கிட்டியிருக்கின்றது. அது சரிவரப் பயன்படுத்தப்படுமா?

ஜி.சீ.ஈ. உயர்தரப் பெறுபேற்று அடிப்படையிலான

# தகுதிகாண் ஆசிரிய நியமனம் குறித்து வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுக!

## மாகாணக் கல்வி அமைச்சு ஆணைக்குழுவிடம் கோரிக்கை

திருகோணமலை,டிசெ.24

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் வடக்கு - கிழக்கில் ஆயிரம் தகுதி ஆசிரியர்களை நியமிப்பதற்கு உரிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுமாறு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு கல்விச் சேவை ஆணைக்குழுவைக் கேட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் 3 ஆயிரம் ஆசிரியர்களை நியமிக்க கல்விச் சேவை ஆணைக்குழு அனுமதி வழங்கியிருந்தது.

ஆனால், அக்காலப்பகுதியில் காணப்பட்ட நிதிப் பற்றாக்குறை உட்பட இதர காரணங்களால் அந்நியமனங்கள் முற்றாக நடைமுறைப்படுத்தப்படாது ஒரு தொகுதி ஆசிரியர்களே நியமனம் செய்யப்பட்டனர்.

தற்போது ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கு திறைசேரி நிதி வழங்க முன்வந்துள்ளது. இதனையடுத்தே அவற்றை வழங்குவதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்யும் திட்டத்தின்கீழ் இதுவரை 750 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்றும் - மிகுதியாகவுள்ள 250 பேருக்கான நியமனக் கடிதங்களை தயாரிக்கும் பணிகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் -

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் தெரிவித்தார்.

மேற்படி 250 பட்டதாரிகளும் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் நியமனம் பெறுவர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-5)

# கோண்டாவில் கிழக்கில் அதிரடி கசிப்பு வேட்டை

## பொலீஸ் - இளைஞர்கள் கூட்டு நடவடிக்கை

இணுவில்,டிசெ.24

கோண்டாவில் கிழக்கு சென்.செபஸ்தியார் வீதிப்பகுதியில் உள்ள வீடுகளில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.00 மணி அளவில் அப்பகுதி இளைஞர்கள், பொலீஸாரின் உதவியுடன் கசிப்பைத்தேடி அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்தத் தேடுதல் வேட்டையின்போது கசிப்பு விற்பனை மற்றும் உற்பத்தியாளர் சிலர் கையும்மெய்யுமாகப் பிடிபட்டதாகக் கூறப்படுகிறது. கோடா, கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படும் உபகரணங்கள் என்பனவும் அப்போது கைப்பற்றப்பட்டன.

ஒரு சிலர் தாம் வைத்திருந்த கசிப்பு, கோடா என்பனவற்றை மலசலகூடம் மற்றும் கிணறுகளில் ஊற்றியதாகவும்- உபகரணங்களை அயலில் உள்ள பாடசாலை வளவு பற்றைக் காணிகளில் வீசியதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் பொலீஸாரையும் இளைஞர்களையும் கடுமையாக ஏசியதாகவும் தெரியவருகிறது. இத்தேடுதலில் பெண்கள் உட்பட்ட 5 பேரைப் பொலீஸார் கைதுசெய்தனர். இந்த அதிரடி கசிப்பு வேட்டையின்போது முப்பதுக்கு மேற்பட்ட பொலீஸாரும் ஐம்பதுக்கு மேற்பட்ட இளைஞர்களும் ஈடுபட்டனர். (ஒ-86-ரி)

# கந்தளாய் வீதியில் வெள்ளம் பாய்வதால் மூதூர் போக்குவரத்துக்குத் துண்டிப்பு

## வெள்ள அகதிகளுக்கு இதுவரை நிவாரணமில்லை

திருகோணமலை,டிசெ.24

திருமலை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக கந்தளாய் - அல்லை வீதியை மேவி வெள்ளம் பாய்கின்றது. இதனால், மூதூரிலிருந்து தூர இடங்களுக்கு நடத்தப்படும் பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளது. மூதூரிலிருந்து மட்டக்களப்பு, வெருகல் பஸ் சேவை கடந்த 12ஆம் திகதி முதல் இடம்பெறவில்லை. அவ்வாறே மூதூரில் இருந்து கொழும்பு மற்றும் திருமலைக்கான பஸ் சேவைகளும் இடம்பெறவில்லை.

இது தொடர்பாக மூதூர் நியூ ஈஸ்டன் பஸ் கம்பனி முகாமையாளர் க.தம்பிராசா தெரிவிக்கையில், வீதிகளில் வெள்ளம் பாய்வதனாலும், வீதிகள் உடைந்திருப்பதாலும் பஸ்சேவைகளை நடத்தமுடியாதுள்ளது. இதனால், ஊழியர்களுக்கும் சாரதிகளுக்கும், நடத்துநர்களுக்கும் சம்பளம்கூட வழங்கமுடியாதுள்ளது. இது தொடர்பாக நியூ ஈஸ்டன் பஸ் கம்பனி முகாமையாளருக்கும், பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவித்திருக்கிறோம் - என்றார்.

இதற்கிடையே மூதூருடனான போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டுள்ளதால் அங்கு பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. மூதூருக்கான படகுச்சேவையும் கடல் கொந்தளிப்புக் காரணமாக சீர்குலைந்துள்ளது.

வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்த மூதூர் மக்கள், நல்லூர் பாடசாலையிலும், ஈச்சிலம்பற்றில் சேனையூர் மகா வித்தியாலயத்திலும் தங்கியுள்ளனர். நிவாரணம் வழங்குவதற்கான நிதி ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும் நிவாரணங்கள் ஏதும் இதுவரை அவர்களுக்கு வழங்கப்படவில்லை. மழை காரணமாகத் தமது பிரதேசத்தில் 1.5 ஆயிரத்து 503 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என மூதூர் பிரதேச செயலாளர் நடராஜா தெரிவித்தார். (எ)

### நாளை

மார்கழி 10
புதன்கிழமை
(25.12.2002)
திதி : ஷஷ்டி
முன்னிரவு 8.10 வரை
நட்சத்திரம்: பூரம்
பின்னிரவு 4.58 வரை.
நத்தார்
சுபநேரம் : 4.58 - 6.26
ராகுகாலம் : 12.26 - 1.56
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

கணவனும் மனைவியும் சேர்ந்து 4 கண்களாலும் 4 காதுகளாலும் பார்த்தும், கேட்டும் இல்லறம் நடத்தவேண்டும். ஆனால், வாய்களிரண்டையும் ஒன்றாகக் குறைத்துவிட வேண்டும்.

# மிதிவெடிகளை தாமே அகற்றும் வளலாய்ப் பகுதி மக்கள்

வளலாய்,டிசெ.24

வளலாயில் முன்னர் சூனியப் பிரதேசமாக இருந்து பின்னர் மக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து வெடிக்காத நிலையில் மிதிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன.

மீளக்குடியமரும் மக்களும், விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் விவசாயிகளும் தாமே தமது இடங்களில் காணப்படும் வெடிபொருள்களை மிகுந்த சிரமத்தின் மத்தியில் அகற்றி வருகின்றனர்.

இவ்வாறு அகற்றப்படும் வெடிபொருள்களை இவர்கள் பற்றைகளிலும் பாவிக்காத கிணறுகளிலும் வீசுவதைக் காணமுடிகிறது.

இதேவேளை - இப்பகுதியில் இதுவரை 15இற்கும் அதிகமான கால்நடைகள் மேய்ச்சலுக்குச் சென்று தமது கால்களை இழந்தமை தெரிந்ததே. (எ-178)

# அராலி ஊரத்திப் பகுதிக்கு மின் இணைப்பு வழங்குக!

## பொதுமக்கள் மின்சார சபையிடம் கோரிக்கை

அராலி,டிசெ.24

அராலி மத்தி ஊரத்திப் பகுதிக்கு மின் இணைப்பை வழங்குமாறு இப்பகுதி மக்கள் மின்சார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து பொதுமக்கள் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மின்சார இணைப்பு வழங்கப்படாமையினால் மேற்படி பகுதிகள் அனைத்தும் இருளில் மூழ்கியுள்ளன. அத்துடன் இருள் சூழ்ந்த நிலையைச் சாதகமாகக் கொள்ளும் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியும் வருகின்றனர்.

அத்துடன் மேற்படி பகுதியில் உள்ள இந்து ஆலயங்கள் இரண்டு அண்மையில் புனரமைக்கப்பட்டதுடன் அந்த ஆலயங்களின் கும்பாபிஷேகத்தை அடுத்தமாதத்தில் நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

எனவே, கிராமமக்கள் நன்மைபெறவும், ஆலயங்களுக்கு மின் ஒளி கிடைக்க வசதியாகவும் இந்தமாத இறுதிக்குள் அராலி மத்தி ஊரத்திப் பகுதிக்கு மின் இணைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-ரி)

ஈராக்குடன் போர் மூண்டால்

# அமெ. விமானங்கள், கப்பல்கள் இலங்கையை பயன்படுத்தக்கூடும்

ஈராக்குடன் அமெரிக்காவுக்குப் போர் மூளுமேயானால் இலங்கையின் ஆகாயப் பிரதேசத்தின் மீது அமெரிக்கப் போர் விமானங்கள் பறக்கவும் இலங்கைத் துறைமுகங்களை அமெரிக்க கப்பல்கள் பயன்படுத்தவும் இலங்கையின் அனுமதியை அமெரிக்கா கோரலாம் என்று அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ் தெரிவித்திருக்கிறார்.

ஈராக்குடனான போர் 'இறுதி நடவடிக்கை' எனத் தெரிவித்திருக்கும் தூதுவர், ஆனால், இலங்கையின் அனுமதியை அமெரிக்கா கோருவது நினைத்துப்பார்க்கக்கூடியதொன்றாகும் எனவும் கூறியிருக்கிறார்.

"போர் மூளுமேயானால், அது இலங்கைமீது என்ன தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அச்சொட்டாகக் கூறமுடியாது. இலங்கையின் ஆகாயப் பிரதேசத்தைப் பயன்படுத்தவும் எமது கப்பல்கள் இங்கு எண்ணெய் நிரப்பவும் அனுமதியளிக்குமாறு இலங்கை அரசாங்கத்தைக் கோருவது சாத்தியமானதாகும். அது நிச்சயமானதல்ல. ஆயினும், அவ்வாறு நடக்கும் என்பது நினைத்துப்பார்க்கக் கூடியதொன்றாகும் என்று தூதுவர் வில்ஸ் கூறியிருக்கிறார்.

இலங்கை தொடர்பான தனது கொள்கையை அமெரிக்கா இவ்வாண்டின் ஆரம்பத்தில் மீள்பரிசீலனை செய்தது எனவும் பரஸ்பர ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து செயற்படுவதாகவும் தூதுவர் மேலும் கூறியிருக்கிறார். (ஒ)

# மட்டுநகரில் இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்த நடவடிக்கை

மட்டக்களப்பில் கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மீள் குடியமர்வு நடவடிக்கைகள் அரசசார்பற்ற நிறுவனங்களினூடாக மேற்கொள்ளப்படவிருப்பதாக புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் கு.கோபாலசிங்கம் தெரிவித்தார். அரசசார்பற்ற நிறுவனங்களிடம் இதற்கான விவரங்களைத் திரட்டுவதற்குரிய படிவங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

மீள் குடியமர்த்துவோரின் விவரங்கள் திரட்டப்பட்டதும், அவர்களின் பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஞ)

# நாட்டுக்கும் அரசுக்கும் நானே தலைவி பிரதமருக்கு எந்த அதிகாரமும் இல்லை!

## ஜனாதிபதி பேட்டி; சமாதானத்துக்கு ஆதரவு என்கிறார்

கொழும்பு,டிசெ.24

'நான் நாட்டின் தலைவி. அரசுக்கும் தலைவி நானே. ஆயுதப் படைகளுக்கு உத்தரவிடும் தலைவியும் நானேயாவேன். அவர்கள் (ஐ.தே.கவினர்) அமைச்சர்கள் மட்டுமே. பிரதமருக்கு எந்த அதிகாரமும் இல்லை. பிரதமரைப் பதவி விலக்கிவிட்டு நான் பொறுப்பேற்கமுடியும். அதை நான் செய்யவில்லை. பாதுகாப்பு அமைச்சரை நான் விலக்கமுடியும். ஆனால், அதை நான் செய்யவில்லை.'

- இவ்வாறு கூறுகிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. சிங்கள வாரப் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய பேட்டியில் இவற்றைக் கூறியிருக்கும் ஜனாதிபதி, சமாதானச் செயற்பாடுகளை தான் முற்றாக ஆதரிப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

பேட்டியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

சமாதானச் செயற்பாடுகளில் குறைபாடுகள் இருக்குமேயானால், அவை குறித்துப் பொதுமக்களுக்கு அறிவிப்பது நாட்டின் தலைவி என்ற முறையில் எனது கடமையாகும். அந்தக் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவது எனது கடமை.

சமாதானச் செயற்பாடுகளுக்கு எனது உதவியை அரசு கோரவில்லை. பல தடைகளை நான் ஏற்படுத்தமுடியும். என்றாலும், அவ்வாறு செய்ய விரும்பவில்லை.

விடுதலைப் புலிகளை மதிப்பிடாமல் அவர்களுடன் கருமமாற்றுவது ஆபத்தானது. முன்னர் நடந்த பேச்சுக்களில் அவர்கள் என்ன செய்தார்கள், என்ன செய்யவில்லை என ஆராய்வது அவசியம்.

இவற்றில் எதனையும் செய்யாமல், தேர்தல் ஒன்றில் வெற்றி பெறுவதற்காக புலிகள் இயக்கத்துடன் ஒப்பந்தமொன்றில கையெழுத்திட்டனர். இப்பொழுது என்ன நடந்திருக்கிறது என்பதைப் பாருங்கள்.



அரசமைப்புச் சட்டத்தில் உள்ளவாறு நாட்டின் தலைவி நானே என்பதைக் கூறுகிறேன். எனவே, சக வாழ்வுக்குத் தேவையானது அவர்கள் தரப்பிலிருந்து வழங்கப்படவில்லை. - இவ்வாறு அவர் கூறியிருக்கிறார். (எ)

## முஸ்லிம் காங்கிரஸ் உட்கட்சிப் பூசல்:

# காத்திரமான முடிவு எடுப்போம் என ஹரீஸ், அன்வர் இஸ்மாயில் அறிவிப்பு

நிந்தவூர்,டிசெ.24

உட்கட்சிப் பூசலால் பிளவுபட்டிருக்கும் முஸ்லிம் காங்கிரஸின் ரவூப் ஹக்கீம் அணியும் அதாவுல்லா அணியும் தலா ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சமபலம் கொண்டவையாக இருக்கின்றன. முஸ்லிம் காங்கிரஸின் எஞ்சியுள்ள இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களான அன்வர் இஸ்மாயிலும் ஹரீஸும் தாம் இனி மௌனமாக இருக்கப்போவதில்லை என்றும் காத்திரமான முடிவை எடுக்கப்போவதாகவும் அறிவித்துள்ளனர்.

அவர்கள் இருவரும் மதில்மேல் பூனையாக இருந்து வருகிறார்கள் என்ற குற்றச்சாட்டு அவர்கள் மீது இப்போது சுமத்தப்பட்டு வருகிறது.

அவர்கள் இருவரும் கூட்டாகவே சிந்தித்தும் செயலாற்றியும் வருகிறார்கள். அவர்கள் எந்த அணியில் இணைகிறார்களோ அந்த அணி நாடாளுமன்றத்திலும் வெளியிலும் பலம் பெறும்.

கடந்த சனியன்று சம்மாந்துறை மல்கம்பிட்டி பள்ளிவாசலில் சரண்டிப் விளையாட்டுக் கழகத்தின் ஒராண்டு ஒன்றுகூடல் நிகழ்வில் அன்வர் இஸ்மாயில் கலந்துகொண்டு பேசுகையில்-

முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்களிடையே ஏற்பட்ட தனிப்பட்ட பூசல்கள், போட்டி, பொறாமைகள், ஆட்சியில் உள்ளவர்களை யார் காப்பாற்றுவது? யார் அவர்களுக்கு அதிக விசுவாசமாக இருக்கிறார்கள் என்பதைக் காட்டுவது போன்ற விடயங்களே இன்று மேலோங்கி நிற்கின்றன. முஸ்லிம் சமுதாய நலன் பின்தள்ளப்பட்டுவிட்டது.

இந்த நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். குரோதங்கள், விரோதங்கள் எல்லாவற்றையும் புறந்தள்ளி விட்டு முஸ்லிம் சமுதாய நன்மைக்காக தலைவர்கள் ஒன்றுபடவேண்டும்.

நாங்கள், அதாவது நானும் ஹரீஸும் இதில் தெளிவாக இருக்கிறோம்.

இன்ஷா அல்லாஹ் - முஸ்லிம் சமுதாயத்திற்காக - இந்த மண்ணுக்காக - நாட்டின் தேசிய அரசியலுக்காக மட்டுமன்றி, மறைந்த மாமனிதர் அஷ்ரப் வளர்த்த பேரியக்கம் நிலைத்து நிற்பதற்காகவும் காத்திரமான முடிவை சரியான நேரத்தில் நாங்கள் எடுப்போம் என்று உறுதியளிக்கின்றேன் - என்றார். (எ)

### குப்பைகூளங்களால் வாய்க்காலில் வெள்ளம் தேக்கம்

கொழும்புத்துறை,டிசெ.24

கொழும்புத்துறை இலந்தைக்குளத்தில் இருந்து கடலுக்குச் செல்லும் வெள்ள வாய்காலில் குப்பை கூளங்கள் நிறைந்துள்ளன.

இதனால் நீரோட்டம் தடைப்பட்டு அயலில் உள்ள வீடுகள், மைதானம் என்பவற்றுள் வெள்ளம் தேங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் நுளம்புகள் பெருகியுள்ளதுடன் பல்வேறு நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி விவகாரங்கள் குறித்து கொழும்புத்துறை சனசமூக நிலையத்தினர் யாழ். மாநகர சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-30)

### வீதி பலத்த சேதம்; பொதுமக்கள் சிரமம்

யாழ்ப்பாணம்,டிசெ.24

கோண்டாவில் சந்தியையும் இருபாலைச் சந்தியையும் இணைக்கும் வீதி பலத்த சேதமடைந்த நிலையில் குன்றுங்குழியுமாகக் காணப்படுகின்றது.

இதனால் இவ்வீதியால் தினமும் பயணிக்கும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவர்கள், கோப்பாய் மகாவித்தியாலய மாணவர்கள், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-69)

## வடக்கு-கிழக்கு மாகாணமட்ட

# சஞ்சிகைப் போட்டி முடிவுகள் வெளியாகின

நெடுந்தீவு,டிசெ.24

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பாலர் கீழ்ப்பிரிவு, பாலர் மேல் பிரிவு, இடைநிலைப்பிரிவு I, இடைநிலைப்பிரிவு II, இடை நிலைப் பிரிவு III, கல்லூரி நிலைப்பிரிவு என ஆறு பிரிவுகளாக நடத்தப்பட்ட இந்தப் போட்டியில், முதல் மூன்று இடங்களைப் பெற்ற சஞ்சிகைகள், பாடசாலைகள் பற்றிய விவரம் வருமாறு:-

**பாலர் கீழ்ப்பிரிவு**

'விடியலை நோக்கி' - மன்.பாத்திமா கனிஷ்ட ம.ம.வி. பேசாலை.

'பாலர் மலர்' - யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

'விளையும் முத்துக்கள்' - மட்.சித்தாண்டி ஸ்ரீ.இ.கி. வித்தியாலயம்.

**பாலர் மேற்பிரிவு**

'மொட்டு' - வ/புதுக்குளம் ம.வித்தியாலயம்.

'நந்தவனம்' - மட்.பத்ரிய்யா. வித்தி., காத்தான்குடி.

'இளந்தளிர்' - மட்.அமிர்தகளி ஸ்ரீசித்திவிநாயகர் ம.வி.

**இடைநிலைப் பிரிவு I**

'மொட்டு' - மட்.துறை நீலாவணை மெ.மி.த.க.பாடசாலை.

'விண்மணி' - க/கல்முனைக்குடி அல்.அஸ்ஹார் வித்தி.

'கலைச்சுடர்' - யா/நெடுந்தீவு. றோ.க.வித்தியாலயம்.

**இடைநிலைப் பிரிவு II**

'ஒளிக்கீற்று' - க/அல் அஷ்றக் தே.பா., நிந்தவூர்.

'ஞானதீபம்' - யா/சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்.

'அலைக்கரை' - க/சம்மாந்துறை அல்-அமீர் வித்தி.

**இடைநிலைப் பிரிவு III**

'பருவம்' - மு/வித்தியானந்தா கல்லூரி, முள்ளியவளை.

'கீற்று' - கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை.

'தமிழருவி' - மன்.கருங்கண்டல் ம.வித்தி.

**கல்லூரி நிலைப்பிரிவு**

'ஊக்கி' - மட்.பட்டிருப்பு ம.ம. வித்தியாலயம்.

'இணையம்' - மன்.அடம்பன் ம.ம. வித்தியாலயம்.

'இளந்தளிர்' - யா/உசன் இராமநாதன் ம.வித்தியாலயம்.

முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 29ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறவுள்ள இலக்கிய விழாவில் வைத்து வழங்கப்படும் [illegible] உதவிக் கல்விப் பணிப்பாளர் [illegible]கசு அறிவித்துள்ளார். (எ-111)

### சண்டிலிப்பாய் இந்துவில் மூன்று மாடிக்கட்டடம்

சண்டிலிப்பாய்,டிசெ.24

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் ஜி.ரி.இசற் நிறுவனத்தின் உதவித் திட்டத்தின்கீழ் மாடிக்கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

23 லட்சத்து 45 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீட்டில், கல்லூரி பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் பங்களிப்புடன் இந்த மாடிக்கட்டடம் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இக்கல்லூரிக்கு மாணவர், ஆசிரியர்களுக்கான கதிரைகள், மேசைகள் ஆகிய தளபாடங்களை வழங்குவதற்கும் ஜி.ரி.இசற் நிறுவனம் முன்வந்துள்ளதாகவும் கூறப்பட்டது. (எ-135)

## கல்விச்சாலைக் காட்சிகள்



ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் இடம்பெற்ற கலை நிகழ்வில் தரம் 1 மாணவ, மாணவியர் வழங்கிய நிகழ்ச்சியின்போது எடுக்கப்பட்ட படம். (ஒ)



கோண்டாவில் இந்து மகாவித்தியாலய தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பல்கலைக்கழக விரிவுரையாளர் க.அருந்தாகரன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். (ஒ)



அண்மையில் நடைபெற்ற மானிப்பாய் கோவில்பற்று இந்து சமய விருத்திச் சங்க முன்பள்ளி விளையாட்டு விழாவின்போது முன்பள்ளிச் சிறார்கள் ஒலிம்பிக் தீபம் ஏற்றுவதைப் படத்தில் காணலாம். (எ)



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழாவில் முதல் பிரதியை இளைப்பாறிய அதிபர் பி.பாலச்சந்திரனிடமிருந்து கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம்.

அருகில் அதிபர் இ.இராகவன் காணப்படுகின்றார். (எ-173)

# பிரபாகரனுடன் இணக்கப்பாட்டை காணமுடியுமாயின் ஏன் ஜனாதிபதி சந்திரிகாவுடன் காணமுடியாது?

**தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகள் எவ்வளவு தீவிரமாகக் கொள்ளப்பட்டாலும் அது செயல்வடிவம் பெறவேண்டுமாயின் சந்திரிகா குமாரதுங்காவின் ஒத்துழைப்பு மிக அவசியம். காரணம், அவர் ஜனாதிபதி மாத்திரமன்றி, பொ.ஐ.முன்னணியின் தலைவியாகவும் நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீல.சு.கட்சியின் தலைவியாகவும் விளங்குகிறார் - என்கிறார் கட்டுரை ஆசிரியரான சேகர. 'ராவய' வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

ஆயுதமேந்திப் போராட்டம் நடத்திய விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனுடன் இணக்கப்பாடொன்றுக்கு வர, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முடிந்தபோதிலும், ஜனநாயக ரீதியிலான பதவிப்போட்டியில் எதிர்க்கட்சித் தலைவியென்ற பாத்திரம் தாங்கி நடித்துக்கொண்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகாவுடன் இதுவரையில் இணக்கப்பாடொன்றுக்கு வரமுடியவில்லை.

இனப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வொன்றைக் காணும் நோக்கில் விடுதலைப் புலிகள் அமைப்புடன் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக்கொள்வது அத்தியாவசியமாக இருந்தமை போன்றே, பிரதான எதிர்க்கட்சியாகச் செயற்படும் பொ.ஐ.முன்னணியுடனும் இணக்கப்பாடு காணப்படவேண்டியது மிக அவசியமான விடயமாகும்.

ஜனாதிபதி சந்திரிகா, நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மட்டுமல்ல, முக்கிய எதிர்க்கட்சியான பொ.ஐ.முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றின் தலைவியுமாவார்.

இனப் பிரச்சினை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டுமானால், ஆகக்குறைந்தது அந்த இணக்கப்பாட்டுக்கு எதிர்க்கட்சியின் ஆதரவைப் பெற்றுக்கொண்டால் மட்டுமே அது சாத்தியமாகும்.

இச்சிரமமான சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் ஜனாதிபதி செயற்பட்டு வருகிறார். இது தொடர்பாக அவர் மேற்கொள்ளும் எந்தமுடிவும் பொ.ஐ.முன்னணிக்குப் போன்றே ஸ்ரீல.சு.கட்சிக்கும் பொருந்தும். அரசு, ஒன்றில் ஜனாதிபதியுடன் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்; அல்லது ஜனாதிபதியைத் தனிமைப்படுத்தி, பொ.ஐ.முன்னணியின் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைத் தம் பக்கம் பெற்றுக்கொள்ளத்தக்கதான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

ஆனால், இதற்கான செயற்றிட்டமோ, திறமையோ அரசிடம் இருப்பதாகத் தோன்றவில்லை.

பொ.ஐ.முன்னணியைக் கலந்தாலோசித்து மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான திடமான கொள்கைகள் எவையும் ஆரம்பத்திலிருந்தே அரசிடம் இருந்ததாகத் தெரியவில்லை. ஜனாதிபதியுடன் மோதி, அவரிடமுள்ள அதிகாரங்களை இழக்கச் செய்யவேண்டும் என்ற கருத்தை ஐ.தே.முன்னணி உறுப்பினர்களில் ஒருசாரார் கொண்

**தமிழில்: விசியஸ்ரீ**

டிருந்தனர். ஜனாதிபதியுடன் பிணக்கின்றிச் சுமுகமான முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமென மற்றொருசாரார் விரும்பினர். அரசு இவ்விரு சாராரின் கருத்துக்கள் காரணமாக இழுபறிப்பட்டதேயன்றி, இது தொடர்பாக பொருத்தமான முடிவைத் தேர்ந்தெடுத்து உறுதியான நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை.

அரசு, ஒருபுறத்தில் ஜனாதிபதிக்கு எதிரான கருத்துக்களை வெளிப்படுத்தும் பொ.ஐ.முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சுமுகமான உறவைப் பேணிவந்த

அதே சமயம், மறுபுறத்தில் ஜனாதிபதியுடனும் சுமுகமான உறவைப் பேணும் விதத்தைக் கைக்கொண்டு வந்தது. அரசமைப்பின் ! ஆவது திருத்த முயற்சி தோல்விய ு முடிந்ததையடுத்து, ஜனாதிபதிய ன் கை பலமடைந்தது மட்டுமன்றி, ஜனாதிபதிக்கு எதிராக பொ.ஐ.முன்னணிக்குள்ளிருந்தவாறே சிக்கல்களை உரு







வாக்கிக் கொண்டிருந்த கூட்டத்தினர் இலகுவில் தலைதூக்கமுடியாத சிரமமான நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதனால் சிக்கல்களை உருவாக்க முயன்ற உள்வீட்டுக் குழப்பக்காரர்களே கஷ்டத்துக்கு உள்ளாகினர். கடைசியில் அவர்கள் தமது தற்போதைய நிலையைத் தக்கவைத்துக்கொள்ளும் நோக்கில் ஜனாதிபதியின் பக்கம் சார்ந்த நிலையை அவர்கள் மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தியபோதும் ஜனாதிபதி அவர்களை ஓரங்கட்டாவிடினும் அவர்கள் தொடர்பாக மிகுந்த அவதானத்தைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தார்.

ஐ.தே.கட்சிகூட, பொ.ஐ.முன்னணி தொடர்பாக கடும் அதிருப்தியைக் கொண்டிருப்பது தவிர்க்கமுடியாத தொன்றாகும். அதுபோன்றே, பொ.ஐ.முன்னணியும் ஐ.தே.கட்சி தொடர்பாக கடும் அதிருப்தியைக் கொண்டிருப்பதும் தவிர்க்கமுடியாததொன்றே.

அதிகாரம் மிக்க அரசியல் நடவடிக்கைகளில் இவ்விரு பகுதியினரும் தாம் அதிகாரத்தில் இருந்த சமயத்தில் ஒரு பகுதியினர் மறு பகுதியினருக்கெதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கொள்கையானது மிகவும் தீவிரமான ஒன்றாகும். நீண்டகாலம் ஆட்சி அதிகாரத்தில் இருந்தவேளையில், ஐ.தே.கட்சியினர் ஸ்ரீல.சு.கட்சியினருக்கெதிரான பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டமை போன்றே, பொ.ஐ.முன்னணியினர் தாம் பதவியிலிருந்த ஏழு ஆண்டு காலப் பகுதியில் ஐ.தே. கட்சியினர்மீது பல பழிதீர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். பின்னர் பதவிக்கு வந்த ஐ.தே.கட்சி, தம் எதிர்த்தரப்பினருடன் கொண்டிருந்த போக்கு தூய்மையான ஒன்றல்ல.

இவ்விரு தரப்பினருக்குமிடையேயான அன்னியோன்யப் பகை அற்றுப்

## மாற்றார் தோட்டத்திலிருந்து...:

போகும்வரை, இனப்பிரச்சினை தொடர்பாக ஒரு பொது இணக்கப்பாடு காண இயலும் என்பது பற்றிச் சிந்திக்க முடியாது. ஆனால், இப்பிணக்குகளுக்குத் தீர்வுகாணும் திறன் அரசிடம் உள்ளதாகவும் தோன்றவில்லை.

பாரிய பிரச்சினைக்குத் தீர்வுகாண முயலும் தலைவர்கள், தமது தரப்பினரிடையே மாத்திரமன்றி எதிர்த்தரப்பினரின் கௌரவத்திற்கும் பாத்திரமாகும் விதத்தில் செயற்படவேண்டும்.

தென்னாபிரிக்க நாட்டுப் பிரச்சினைகளின்போது, பிரதமர் கிளார்க் வகித்த பாத்திரம் கறுப்பின மக்களின் கௌரவத்துக்கு உள்ளானது போன்று நெல்சன் மண்டேலா வகித்த பாத்திரம் வெள்ளையர்களின் கௌரவத்துக்குள்ளானது. இன்று ரணில் விக்கிரமசிங்கபோன்றே பிரபாகரனும் அதைப்போன்ற பாத்திரம் ஏற்று நடிக்கவேண்டியுள்ளது. ரணிலின் பாத்திரம் சிங்களமக்களது மட்டுமன்றித் தமிழ்மக்களதும் கௌரவத்துக்குள்ளாக வேண்டும். மறுபுறம் பிரபாகரனது பாத்திரம் தமிழ்மக்களது மட்டுமன்றி சிங்களமக்களதும் கௌரவத்துக்குள்ளாகவேண்டும்.

ஆனால், இப்பிணக்கைத் தீர்த்து வைக்கும்பொருட்டு ஐ.தே.கட்சியும் விடுதலைப் புலிகள் அமைப்பும் மட்டும் சேர்ந்து முயற்சிப்பது போதுமானதல்ல. இதற்காக ஆகக்குறைந்தது முக்கிய எதிர்க்கட்சியான பொ.ஐ.முன்னணியின் இணக்கப்பாடும் பெற்றுக்கொள்ளப்படவேண்டும். ஆனால், இவ்விடயத்தில் ரணில் வகிக்கும் பாத்திரமும், பிரபாகரன் வகிக்கும் பாத்திரமும் பொ.ஐ.முன்னணியின் கௌரவத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்தால் மட்டுமே பொ.ஐ.முன்னணியின் உடன்பாட்டைப் பெற வாய்ப்புண்டு.

அப்படியான கௌரவத்தை எவ்வாறு உருவாக்கலாம்? அதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய முயற்சிகள் யாவை? என்பவை, ஒட்டுமொத்தமான சமாதான முயற்சிகளும் எதிர்நோக்கும் முக்கியமான சவால்களும் ஆகும். ★

---

### சில்லாலை வீதியில் உள்ள

# சம்பில்துறை பாலத்தை புனரமைக்குமாறு கோரிக்கை

சில்லாலை வீதியிலிருந்து சம்பில்துறைக்கு செல்லும் பாலம் பலத்த சேதமடைந்து காணப்படுகிறது.

இதனால் இந்தப் பாலத்தினூடாகச் சென்று பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. வட்டக்குளம் விவசாயிகள் இப்பாலத்தினூடாகச் சென்று பயிர்ச் செய்கையில் ஈடுபடவேண்டியிருப்பதால், உடனடியாக பலத்த சேதமடைந்துள்ள இப்பாலத்தைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு விவசாய சம்மேளனத்தினர் சண்டிலிப்பாய் பிரதேச செயலரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் அண்மையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது இப்பாலம் பற்றி அங்கு பிரஸ்தாபிக்கப்பட்டது.

அதேவேளை - பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கத்தின் முன்பாகவுள்ள மதவடிப் பகுதியில் மாரிகாலத்தில் தண்ணீரைக் கட்டுப்படுத்தமுடியாமல் இருப்பதாகவும் விவசாய சம்மேளனத்தினர் இந்தக் கூட்டத்தில் பிரதேச செயலரிடம் எடுத்துக்கூறினர்.

இவற்றைக் கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கை எடுப்பதாக பிரதேச செயலர் நா.வேதநாயகன் உறுதியளித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-152)

---

# ஹக்கீமை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குவதென அதாவுல்லா அணி முடிவு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் பதவியிலிருந்து ரவூப் ஹக்கீமை வெளியேற்றுவதென முஸ்லிம் காங்கிரஸின் ஏ.எல்.எம்.அதாவுல்லா தலைமையிலான அணி தீர்மானித்திருக்கிறது. அந்த அணியின் செயலாளர் நாயகமான டாக்டர் ஏ.எல்.எம்.ஹப்ரத் அறிக்கை ஒன்றில் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

ஏ.கே.முஸம்மில் தலைமையிலான ஒழுங்குக் குழு, ஹக்கீம் கட்சியிலிருந்து நீக்கப்படவேண்டுமென ஏகமனதாக சிபாரிசு செய்ததையடுத்து, அவரைக் கட்சி உறுப்பினர் பதவியிலிருந்து நீக்க கடந்த 20ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஹக்கீமுக்கு எதிரான 37 குற்றச்சாட்டுகள் பற்றி அவருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி விளக்கமளிக்க ஒழுங்குக் குழு அவருக்கு சந்தர்ப்பமளித்தது.

எவ்வாறாயினும், அவர் விசாரணைக்கு ஆஜராகத் தவறினார். குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விளக்கம் தரவும் அவர் தவறினார். விசாரணையை ஒத்திவைக்கவோ, கால அவகாசம் வழங்கவோ அல்லது ஒரு பிரதிநிதியை அனுப்பவோ ஹக்கீம் கோரவில்லை.

ஏ.ஜே.முஸம்மில் (தலைவர்), எம்.பி.ஏ.அசிஸ், ஐ.ஏ.ஹமீட் ஆகியோர் ஒழுங்குக் குழுவில் அடங்கியிருந்தனர் - இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (எ)

---

# தனங்களப்பு, மறவன்புலோ மக்களின் அவல வாழ்வுக்கு முடிவு கிட்டுமா?

தென்மராட்சியின் தெற்குப்பக்கமாக ஏ-9 கண்டி வீதியையும் அதனை அடுத்துவரும் புகையிரத வீதியையும் கடந்து சென்றால் அகன்று விரிந்த வயல் வெளிகளையும் கடல்நீர் ஏரிகளையும் குளங்




களையும் பனை, தென்னை முதலிய வான் பயிர்களும் அமையப்பெற்று வெளிநாட்டு பறவைகளைக்கூட கொள்ளைகொள்ள வைக்கும் அழகிய பிரதேசம் தென்மராட்சி தெற்கு பிரதேசம்.

இப்பிரதேசம் நாவற்குழி கேரதீவு வீதியையும் சாவகச்சேரி தனங்கிழப்பு வீதியையும் கொண்டு இருப்பதனால் வீதியை அண்டிய வீதிக்குடியிருப்பையும் அதனை அடுத்து விவசாயக குடியிருப்பையும் அதனை அடுத்து மீன்பிடிக் கரையோரக் குடியிருப்பையும் இங்குள்ள மக்கள் காலங்காலமாக பூர்வீகமாக வாழ்ந்து வந்துள்ளனர். இப்பிரச்சினையின் காரணமாக சில காலங்களில் துன்பங்களை அனுபவித்தபோதிலும், மிகவும் சந்தோஷமாக தமது வாழ்க்கையை நடத்திவந்தனர்.

12.12.1999இல் ஏற்பட்ட எதிர்பாராத பிரச்சினைகளால் மக்கள் யாவரும் திடீரென இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் தனங்கிழப்பு, மறவன்புலோ, கைதடி, நாவற்குழி கிராமங்களை உள்ளடக்கிய சுமார் 600 குடும்பங்களை சேர்ந்த 15 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்தனர். இதிலும் தனங்கிழப்புவாழ் மக்கள், வீதி வழியாகப் பெயர எத்தனித்த வேளையில் தனங்கிழப்பு சந்தியில் இருந்த இராணுவத்தினர் மக்கள் எவரையும் அப்பால் செல்ல அனுமதிக்கவில்லை.

இதனால், வேறு வழியின்றி எறிகணை வீச்சு, துப்பாக்கிச்சூடு, விமானக்குண்டு வீச்சுக்கள் போன்ற தாக்குதல்களை வயல்வெளிகள், குளங்கள், கடல்கள் இவற்றைத்தாண்டி கொட்டும் மழையின் மத்தியில் உடுத்த உடுப்புடன் சாவகச்சேரி நோக்கிச் சென்றனர். ஏனைய கிராம சேவை அலுவலர் பிரிவுகளிலும் உள்ள மக்கள் உடன் வெளியேறி நாவற்குழி, தச்சன்தோப்பு பகுதிகளில் சில நாள்கள் தங்கினர். ஷெல் வீச்சுக்கள் மேலும் மோசமடைய அங்கிருந்த மக்களும் முற்றாக வெளியேறி வடமராட்சி, வலிகாமம் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த அவல வாழ்வைச் சந்தித்த மக்கள், அவல வாழ்விற்கே முகங்கொடுத்து வருகின்றனர். இந்த அவல வாழ்வை இனிமேலும் எத்தனை ஆண்டுகள் பொறுக்கமுடியும்.

ஏனெனில், இப்பகுதி மக்களின் பிரதான தொழிலான விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த விவசாய நிலங்கள் மூன்று வருடங்களாக தமது இயற்கையை இழந்து காணப்படுகின்றன. மேலும் இப்பகுதி மக்கள் வாடகை வீடுகளிலும் உறவினரின் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இந்த அவல வாழ்வை இன்னும் எவ்வளவு காலம் பொறுத்து வாழ வேண்டும்.

**எஸ்.ரீ.விமலன்**

எனவே, தற்போது அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 11 மாதங்கள் கடந்தும் மேற்படி பகுதி மக்களின் அவல நிலைக்கு முடிவுகாணப்படவில்லை. இந்த அவலநிலை நீங்குவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

கௌரவமான, உத்தியோகம் பார்க்கும் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை. வண்ணார்பண்ணை, கந்தர்மடம் பகுதி விரும்பத்தக்கது. 430, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 222-3081 (சி-25498)

### விற்பனைக்கு

மூன்று மாதம் நிரம்பிய டோமன் பிஞ்சர் நாய்க்குட்டிகள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. காலை 10.00-12.30 வரை மாலை 4.00-6.00 வரை. தொடர்பு: இல.6, நந்தாவில் ஒழுங்கை (இராமகிருஷண மிஷன பாடசாலை பின் ஒழுங்கை), கொக்குவில் கிழக்கு. (12012)

கல்மீன்கள், அதற்குரிய உபகரணங்கள், தொட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 535A, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (பெற்றோல் நிலையத்துக்கு அருகில்).
(சி-25600)

புறொயிலர், கல்பேட்ஸ், சேவல் என்பன விற்பனைக்குண்டு. வேண்டிய அளவுகளில் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு, (பூங்கனிச் சோலைக்கும் முடமாவடிச் சந்திக்கும் இடையில்). (12138)

Broiler, சேவல் பேட்டுக் குஞ்சுகள் 26-12-2002 வியாழக் கிழமை விநியோகிக்கப்படும். செவ்வாய் முழுநாளும் புதன் காலை 10மணி வரையும் பதிவுகள் மேற்கொள்ளப்படும். தொடர்பு: இல.52, மருதடி வீதி, நல்லூர். (12157)

### தவறிவிட்டது

அங்கலப்பாய், இணுவில் கிழக்கைச் சேர்ந்த நடராசா புஷ்பநாதன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல.532860024V), விசேட அடையாள அட்டை (இல.0907022053) என்பன 16-12-2002 இணுவிலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்து உதவவும்.
(12148)

அல்விப்பளை, பளையைச் சேர்ந்த செல்லையா இராமலிங்கத்தின் தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை ஆகியன கிளிநொச்சிக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய விலாசத்தில் ஒப்படைத்து உதவுமாறு வேண்டுகிறேன். (12137)

### திருமண சேவை

1958, ரேவதி, செவ்வாயற்ற கனேடிய அரசாங்கத்தில் வேலை செய்பவருக்கு 35 வயதுக்குட்பட்ட அழகிய மணமகள் வேண்டும். மணமக்கள் தேர்வுக்கு நாடவும் துரை விமலா, இலகு திருமணசேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
(12153)

### மணமகள் தேவை

கனடாவில் அரச உத்தியோகம் பார்க்கும் ரேவதி நட்சத்திரம், 1958 இல் பிறந்த மணமகனுக்கு இந்து உயர்குலத்தில் பிறந்த, அழகிய, பண்புள்ள, 35 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. மணமகன் இங்கு வந்துள்ளார். தொடர்பு: விளம்பர இல.1930, C/o உதயன், யாழ்ப்பாணம். (12154)


**விற்பனைக்கு**

பன்றிகள்
விற்பனைக்குண்டு.
**அண்ணா பாம்**
ஸ்ரேசன் றோட்,
இணுவில்.
(C/25601)



**English Academy**
பிரதான வீதி,
சித்தன்கேணி

பிரிவு II
இலக்கணம்
ஆரம்பம்:~
01.01.2003
திங், புத, வெள் 6-7p.m.
★ அலுவலர்களுக்கு
(12155) வசதியான நேரம்


விரும்பினால் நானாக விலகுவேனே தவிர

# மற்றொரு நபரின் செயற்பாட்டினால் கட்சியிலிருந்து வெளியேறமாட்டேன்!

## ஆதரவாளரிடையே ரவிராஜ் எம்.பி. உரை

வலி.வடக்கு,டிசெ.24

"கட்சியில் இருந்து என்னை யாரும் வெளியேற்றமுடியாது. விரும்பினால் நானாக கட்சியில் இருந்து வெளியேறுவேனே தவிர மற்றொரு நபரின் செயற்பாட்டினால் என்னை வெளியேற்றிவிடமுடியாது." மேற்கண்டவாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தெரிவித்தார்.

தாவடி மத்திய சனசமூக நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்களிடையேயான கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நரவிராஜ் எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

நாம் மக்களுக்கு கடந்த தேர்தலின்போது கூறிய கொள்கைக்கு ஏற்பவே நடந்து கொண்டிருக்கின்றோம். விடுதலைப் புலிகளுடன்தான் பேச வேண்டும். அதற்கு ஆதரவளிப்போம் என்று கூறினோம்.

அதன் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே நடைபெறும் பேச்சுக்கு ஆதரவாக இருந்து வருகின்றோம். அதேபோன்று மக்களை மீளக்குடியேற விடாது தடுத்து நிற்கும் உயர் பாதுகாப்பு வலயம், பயங்கரவாத தடைச் சட்டம் ஆகியவற்றை நீக்கவும் முயற்சித்துக் கொண்டு இருக்கின்றோம்.

இதேபோன்று நாடாளுமன்றத்திற்கு அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்ட விவாதத்தின் போது பாதுகாப்பு அமைச்சின் விவாதத்தில் அதனை எதிர்த்தோம். அதேபோன்று எதிர்த்தே வாக்கும் அளித்தோம்.

எமது கட்சி இன்னும் ஒற்றுமையாகவும் பலமாகவுமே இருக்கின்றது. நாம் அரசில் எந்த ஓர் அமைச்சர் பதவியையும் ஏற்றவர்கள் அல்லர். ஆனால், தொண்டமான் காலத்தில் சேவல் சின்னத்தில் போட்டியிட்டவர்கள் பிற்பாடு அரசுடன் இணைந்து கதிரை அல்லது யானைச் சின்னத்தில் போட்டியிடும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

அதேபோன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பத்தில் மரச் சின்னத்தில் போட்டியிட்டு பின்னர் அரசுடன் இணைந்து மரச் சின்னம் தவிர்ந்து



வேறு சின்னத்தில் போட்டியிட்டார்கள்.

தற்போது இரண்டு கட்சிகளுமே பிணைபட்டு சிதைந்து நிற்கின்றன. நான் இதனை எமது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறியுள்ளேன் என்றார் அவர்.

(ஒ-86)

# கட்சி பொதுச் சபை, செயற்குழுவை கூட்டாவிட்டால் உண்ணாவிரதம்!

## கூட்டணிப் பிரமுகர் எச்சரிக்கை

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை, செயற்குழு ஆகியவற்றை கட்சியின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய உரியமுறையில் கூட்டவேண்டும். அவ்வாறு நடக்காவிட்டால் கட்சிக் காரியாலயம் முன்பாக உண்ணாவிரதம் இருக்கவேண்டி நேரிடும்.

- இவ்வாறு எச்சரித்தார் கூட்டணிப் பிரமுகர் செ.இலகுநாதன். கூட்டணி ஆதரவாளர்களுக்கிடையேயான கலந்துரையாடலிலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அங்கு அவர் கூறியதாவது:-

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் சபை, செயற்குழு என்பன சரியான ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகக் கூட்டப்படவில்லை. இதனை உரிய முறையில் கூட்ட தற்போது உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏனையவர்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அவர்கள் இத்தகைய செயற்பாட்டை மேற்கொள்ளத் தவறுவார்களேயானால் தந்தை காட்டித்தந்த அஹிம்சாவழி இருக்கிறது. அதனைப் பின்பற்றி கட்சிக் காரியாலயத்தின் முன் உண்ணாவிரதம் இருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

கட்சியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் யாழ்ப்பாணம் வந்தபோது இதனைப் பற்றி பலரும் வலியுறுத்தினோம். ஆனால், பல மாதங்கள் சென்ற நிலையிலும் இதற்கான நடவடிக்கை எதுவும் இன்றுவரை எடுக்கப்படவில்லை.

கட்சி கட்டுக்கோப்புக் குலையாமல் மிகவும் இறுக்கமாக இருக்க வேண்டும். இன்று பலரும் கட்சியில் இருந்து ஒதுங்கிப் போகின்ற நிலையே காணப்படுகின்றது. இத்தகைய நிலைமை தொடர்ந்து செல்ல அனுமதிக்கக்கூடாது.

கட்சியின் செயற்பாட்டை வலியுறுத்தி முதலில் கையெழுத்துப் போராட்டம் நடத்தவேண்டிய முன் முயற்சியும் எடுக்கப்படும். ஆகவே உரியவர்கள் கட்சியை சரியான முறையில் தெரிவுகளை மேற்கொண்டு செயற்பட வேண்டும் - என்றார் அவர். (ஒ-86)

### வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.24

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினர் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த வெள்ளி நிகழ்வில் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக் கிழமை 'ஞானச்சுடர்' மார்கழி மாத வெளியீடு இடம்பெறும்.

மலரின் வெளியீட்டுரையை பண்டிதர் சி.வேலாயுதமும் மதிப்புரையை விரிவுரையாளர் ச.விநாயகமூர்த்தியும் நிகழ்த்துவர். (எ)


தென்மராட்சி தனியார் கல்வி நிலைய ஒன்றிய

**பொதுக்கூட்டம்**

*காலம்:* 26.12.2002 வியாழன் பி.ப.3.00மணி
*இடம்:* நியூ றோயல் அக்கடமி, சங்கத்தானை.
*விடயம்:* கல்வி நிலைய நடைமுறைகள் தொடர்பான கலந்துரையாடல், பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்படாத சகல கல்வி நிலையங்கள், பிரத்தியேக (5 பேருக்கு மேற்பட்ட) வகுப்புகள் நடத்தும் அனைத்து நிர்வாகிகளும் சமுகமளிக்கவும்.
*குறிப்பு:* இக்கூட்டத்திற்கு சமுகமளிக்காதவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
(12151) - நிர்வாகம்.




**முக்கிய அறிவித்தல்**

மரணச் சடங்கு, அந்தியேட்டி, அபரக்கிரியைகள்
செய்வதற்கு குருக்கள் தேவைப்படுபவர்கள்
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
க.ஈஸ்வர குருக்கள்
239, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(12147)


**நான்காம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 28 - 02 - 1927



மறைவு 24 - 12 - 1998

**அமரர் நாகமுத்து சின்னத்துரை J.P.**

*(முன்னாள் உடுவில் கி.ச.உபதலைவர்)*

*நான்காண்டு சென்றதய்யா*
*மாறவில்லை உம் திருவதனம்!*
*தேடி நித்தம் ஏங்குகின்றோம்*
*காணவில்லை உம் திருவுருவம்*
*கூடியிருந்து அரவணைத்து - இன்று*
*எம்மை விட்டுச் சென்றதேனோ?*

*பிரிவால் துயருறும்:*
மகள் - பவளமலர்,
மருமகன் - பாக்கியநாதன்
பேரப்பிள்ளைகள் - பிரியா, தீபா, சிந்து, சரண்யா.

*ஞானப்பிரகாசர் வீதி,*
*மல்வம்,*
*உடுவில்.*
(12150)

**கண்ணீர் அஞ்சலி**

எமது நலன்புரிச் சங்க உறுப்பினரும், எமது திணைக்கள அலுவலருமாகிய திருமதி சிவசோதி யோகராசா (நிதி உதவியாளர்) அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி தருமபாலு குணலட்சுமி**

அவர்கள் காலமான செய்திகேட்டு ஆழ்ந்த துயருறுகின்றோம். அவரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*பிரதேச செயலகம்,*
*நல்லூர்.*
நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும்,
நலன்புரிச் சங்க உறுப்பினர்களும். (12165)

**கண்ணீர் அஞ்சலி**

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதியாகக் கடமையாற்றும் திரு.R.பீற்றா அவர்களின் தாயார்

**திருமதி அருளம்மா இராஜப்பு**

22.12.2002இல் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்திற்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

யா/அ.பொ.வைத்தியசாலை,
தா.உ.ந.பு.கூ. சங்கம்.
(12163)

**கண்ணீர் அஞ்சலி**

யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் திரு.T.பஞ்சலிங்கநாதன் தாதிய உத்தியோகத்தர் அவர்களின் தந்தை

**திரு.அ.தில்லையம்பலம**

21.12.2002இல் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்திற்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்,

*யா/அ.பொ.வைத்தியசாலை,*
*தா.உ.ந.பு.கூ. சங்கம்.*
(12164)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/இமையாணன் அ.த.க.வித்தியாலயத்தைச் சேர்ந்த
மாணவர்களாகிய
**சிவகுமார் அஜந்தீபன்**
**சதினி செல்லத்துரை**
**கலைவாணி சின்னத்தம்பி**
**ஜெனிபா குணசிங்கம்**
**கயல்வாணி கதிர்காமத்துலிங்கராசா**

ஆகியோர் அகில இலங்கை விஞ்ஞான சங்கம் நடத்திய விஞ்ஞான வினா விடைப்போட்டியில் முதலிடம் பெற்று பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் 02-12-2002இல் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பாங்குபற்றி பரிசில் பெற்றமைக்காகவும் இவர்கள் அனைவரையும் பாராட்டுவதோடு அவர்களை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்களையும் மனமார வாழ்த்துகின்றோம்.

(12127)
தி.குணசிங்கம் குடும்பத்தினர்,
க.செல்வராசா குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி பொருளியல் விரிவுரையாளர்
தி.வி.அருளானந்தம அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி விசாகசுந்தரம் திரிபுரசுந்தரி**
அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*57/13, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (12128)
இயக்குநர், விரிவுரையாளர்கள், மாணவர்கள்,
பட்டப்படிப்புகள் கல்லூரி.

## விளையாட்டு உபகரணம் விநியோகம்

வலி.மேற்கு,டிசெ.24

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு ஒரு லட்சத்து 44 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டுக்கான பன்முகப் படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியில் இவை கொள்வனவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கான சகல ஏற்பாடுகளை விளையாட்டு உத்தியோத்தர் செல்வி த.சந்திரமதி செய்திருந்தார். (எ-175)


SUBRA (14)
அளவையியல்
திரு.E.S.பவன்
2003 Paper Class (part II)
Thu.-Fri. 4.30 - 6.00
2004 குறியீட்டு அளவையியல்
Sat. - Sun. - 10.30 -12.00
இந்து நாகரிகம்
ஸ்ரீஸ்
2003 Paper Class
Wen.-Thu.- 4 - 5.30
(C/25460)



SALE SALE SALE
CHRISTMAS, NEW YEAR SALE
நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு
DSI பாதணிகள் மலிவு விற்பனை
10% முதல் 40% வரை
விசேட கழிவு
DSI மலிவு விற்பனை நிலையம்
(பூபாலசிங்கம் புத்தகசாலை முன்பாக)
224, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (C/25478)





நத்தார், புதுவருட தினத்தை முன்னிட்டு
சிறப்புத்தள்ளுபடி விலையில்!
நவநாகரிக சேட், T.சேட், கோட்சூட், சூட் வகைகள், டெனிம், சோக்கோ ரவுசர் வகைகள், ரவுசர் துணிவகைகள், ஜம்பர் வகைகள், பட்டுச்சாறிவகைகள், பேபிகவுண் வகைகள், ஸ்கேட் & பிளவுஸ் வகைகள், சல்வார்கமீஸ் வகைகள், கவுண் வகைகள், நவீன டிசைன்களில் பலரக சாறி வகைகள்
அனைத்தையும்
கிறிஸ்மஸ், புதுவருட அதிரடித் தள்ளுபடியில் பெற்றிட
மிலேனியம் பெஷன்
(பொம்பே பஜார்) (மலாயன் கபே முன்பாக)
(C/25527) 10, மின்சார நிலைய வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்.


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

நன்றி நவிலலும் ஆத்மசாந்திப்பிரார்த்தனை அழைப்பும்



தோற்றம்
06
08
1921

மறைவு
24
11
2002

## அமரர் செல்லையா திருநாவுக்கரசு

அன்புக்கும் பண்புக்கும் இருப்பிடமானவரே!
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*
ஓம் சாந்தி!

24.11.2002 அன்று இறைவனடி சேர்ந்த எமது தந்தையின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், தந்தி, தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையங்கள் வைத்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தவர்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் இன்று (24.12.2002) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இந்துக் கல்லூரி ஒழுங்கை,*
*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.* (சி-25547)

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



ஆருயிரே எம் அன்பு ஐயாவே!
ஆண்டுகள் ஒன்று அல்ல
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
ஆறுமோ எம் துயர்;
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
ஆதரிப்பார் இருந்தென்ன
நீங்கள் எம்முடன் இருப்பதுபோல
ஆகுமோ ஐயா?
உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டி
நிற்கின்றோம்.

அமரர்
## இராமன் பரஞ்சோதி

மலர்வு 30-09-1940
உதிர்வு 04-01-2002

திதி: பஞ்சமி (24-12-2002)

*செல்வாபுரம்,*
*கரணவாய் தெற்கு,*
*கரவெட்டி.*

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(11978)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அன்னையின் மடியில்
05
07
1933

ஆண்டவனின் அடியில்
24
11
2002

## அமரர் கந்தையா கிட்டினசாமி

*(இளைப்பாறிய தபால் அதிபர்)*

அன்போடும் பண்போடும் வாழ்ந்த எம் அன்புத் தெய்வமே!
அவ்வகையிலே எம்மையும் வளர்த்த தந்தையே!!
உங்கள் நினைவலைகள் எங்களுக்குள் எப்போதும் பாயும்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் நேரடியாகக் கலந்துகொண்டோருக்கும், தந்திமூலமும், தொலைபேசிமூலமும் அனுதாபம், ஆறுதல் தெரிவித்தோருக்கும், இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றியோருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அத்துடன் இன்று (24.12.2002) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்களை அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*எங்களுடன் உயிராக இருந்து நல்வழிப்படுத்திய*
*எமது தந்தையாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.*

கி.கேசவன்,
*பிலாவடி,*
*தும்பளை,*
*பருத்தித்துறை.* (சி-25544)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கத்திற்கு நன்றி

இடம்பெயர்ந்திருந்த வேளை எனை அரவணைத்து பணி தந்து மாற்றலாகி செல்லும் வேளை ரூபா 10,000 அன்பளிப்பு தந்து கௌரவித்தமைக்கு சங்கத்திற்கும் ஊழியர் நலன்புரிச் சங்கத்திற்கும் என் இதயபூர்வ நன்றிகள்.

க.கனகசிங்கம்
*வண்ணாங்கேணி*
*பளை.*

(C/25610)

## கண்ணீர் அஞ்சலி

எமது அன்பு நண்பன் உமாகஜன் அவர்களின் அன்புத் தந்தை

### சின்னத்தம்பி கார்த்திகேசு

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் எமது நண்பனிற்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது மன ஆறுதலை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*உரும்பிராய்* (12194) - நண்பர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர் திருமதி சந்திரா கிருஷ்ணகுமார் அவர்களின் அன்புத் தந்தையார்

### வீரகத்திப்பிள்ளை நடராசா

அவர்களின் திடீர் இழப்பின் துயரில் அவர்தம் குடும்பத்தவர்களுடன் நாமும் பங்கு கொண்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம்.

*தேசிய சேமிப்பு வங்கி,*
*சாவகச்சேரி.*
(12188)
முகாமையாளரும், ஊழியர்களும்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தரும், யாழ்.கிளை உதவி முகாமையாளருமாகிய

வி.அருளானந்தம் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி வி.திரிபுரசுந்தரி

அவர்கள் 21.12.2002 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம.

முகாமையாளரும் உத்தியோகத்தர்களும்
தேசிய சேமிப்பு வங்கி - சுன்னாகம்.

(C/25614)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 02 - 08 - 1947



உதிர்வு 24 - 11 - 2002

### திருமதி கனகசபை மகேஸ்வரி

இன்று (24.12.2002) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்புத் தாயாரின் ஆத்ம சாந்திப் பூசையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கிறோம்.

*வங்கி வீதி,*
*ஆவரங்கால் மேற்கு.* (12184)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை பொன்னம்பலம்

(ஓய்வு பெற்ற ஆய்வுகூட எழுதுநர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

மந்துவிலைப் பிறப்பிடமாகவும், புன்னாலைக்கட்டுவன் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை-பொன்னம்பலம் நேற்று (23-12-2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் பானுமதி (கனடா), தயாநிதி (வர்த்தகர்) ஆகியோரின் தந்தையும் பூபாலசிங்கம்(கனடா), மணிமேகலை (எழுதுநர் - ப.நோ.கூ.ச.சுன்னாகம்) ஆகியோரின் மாமனாரும் கிரிசாந், பிரியங்கா(கனடா), கஜந்தன், வாசுகி(வயாவிளான் ம.ம.வி) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புன்னாலைக்கட்டுவனில் நடைபெற்று, விலங்கன் இந்து மயானத்தில் நேற்றுத் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
பொ.தயாநிதி (மகன்)
உதயன்முகவர், குப்பிளான்

(12187)

# பனம்தொழில் வல்லுநர்களின் மறியலுக்கு ஆதரவு என்றுமுண்டு!

## நலன்புரி நிலையங்களின் சமாசம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.24

திக்கம் வடிசாலை தொடர்பாக பனம் தொழில் வல்லுநர்களின் போராட்டத்துக்கு எமது ஆதரவு என்றும் உண்டு.

யாழ். மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் - இவ்வாறு தெரிவித்துள்ளது.

வடமராட்சி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியிடம் திக்கம் வடிசாலையை மீண்டும் ஒப்படைக்கக் கோரி மேற்படி சங்கங்களின் அங்கத்தவர்களான பனம் தொழில் வல்லுநர்கள் (சீவல் தொழிலாளர்கள்) பனை அபிவிருத்திச்சபைத் தலைமையகம் முன்பாக நடத்திவரும் தொடர் மறியல் போராட்டத்துக்கே நலன்புரி நிலையங்களின் சமாசம் ஆதரவளித்துள்ளது.

இது தொடர்பாக மேற்படி சமாசம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கூட்டுறவாளர்களாம் பனம் தொழில் வல்லுநர்களின் கூட்டுறவு அமைப்புக்களின் சொத்தாகிய திக்கம் வடிசாலையை மீண்டும் கூட்டுறவாளர்களிடமே ஒப்படைக்கக் கோரி வடபகுதி பனை, தென்னை வள அபவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களால் நடத்தப்படுகின்ற தொடர் மறியல் போராட்டத்திற்கு யாழ் மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசத்தின் ஆதரவைத் தெரிவிக்கின்றோம். திக்கம் வடிசாலை மீளவும் கூட்டுறவாளர்களிடம் ஒப்படைக்கப்படும் வரை நடைபெறும சகல விதமான போராட்டங்களுக்கும் எமது ஆதரவு தொடரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அனைத்து கூட்டுறவுச் சங்கங்களும் இப்போராட்டத்துக்கு ஆதரவு அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கின்றோம். - என்றுள்ளது.

## வளலாயில் மூன்று குளங்கள் புனரமைப்பு

வளலாய்,டிசெ.24

பட்டினிகெதிரான நிறுவனத்தினால் வளலாயில் மூன்று குளங்களும், வாய்க்கால்களும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இதனால் இதுவரை பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படாமல் இருந்த வயல் நிலங்களில் இம்முறை கூடுதலான விவ்சாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். (எ-178)

## பஸ் சேவை பாதைமாற்றம்

வடமராட்சி,டிசெ.24

பருத்தித்துறையிலிருந்து கடற்கரை வீதியூடாக பருத்தித்துறை டிப்போவினால் நடத்தப்படும் பஸ் சேவைகள் நேற்றுமுன்தினம் முதல் மந்திகை, தெருமூடி மரத்தடி, தம்பசிட்டி ஊடாக நடைபெற்று வருகிறது.

கடற்கரை வீதி ஊடான சேவையில் ஈடுபட்டுவரும் பஸ் வண்டிகள் சென்று வரும்பாதையில் - ஓராங்கட்டைச் சந்திக்கும் தம்பசிட்டிச் சந்திக்கும் இடைப்பட்ட தம்பசிட்டி வீதியில் சேதமடைந்த மதகு ஒன்று புனரமைக்கப்பட்டு வருவதை அடுத்தே போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

மேற்படி மதகு புனரமைக்கப்படும் வரை பஸ்சேவைகள் யாவும் இப்பாதையூடாகவே இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, குறிப்பிட்ட மதகு திருத்தப்படுவதால் சைக்கிள், மோட்டார் சைக்கிள், பாரம் குறைந்த வாகனங்கள் செல்வதற்கென அருகில் உள்ள வெற்றுக்காணிக்கு ஊடாக தற்காலிக பாதை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. (எ-173)

## உடன் தேவை

- ☆ வெளிக்கள உத்தியோகத்தர்
- ☆ வீநியோகத்தர்
- ☆ விற்பனையாளர்
- ☆ ஒப்புநோக்குநர்
- ☆ தொழில்நுட்பவியலாளர்
- ☆ பாதுகாவலர்

24 ஆம், 26 ஆம், 27 ஆம் திகதிகளில் பதிவு செய்யவும்.

வித்து மாணவர் சஞ்சிகை
(கிளை நிறுவனம்)
*வல்லிபுர பரியாரியார் ஒழுங்கை*
*பருத்தித்துறை.* (12186)

## பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்கான இலட்சினை

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்கான இலட்சினையை கல்விமான்கள், புத்திஜீவிகளிடமிருந்து எதிர்பார்க்கின்றது. தெரிவு செய்யப்படும் இலட்சினைக்கு கொடுப்பனவு வழங்கப்படும். இலட்சினை தயாரித்து ஒருவார காலத்திற்குள் 'தலைவர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

வே.நவரத்தினம்
தலைவர்
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

(C/25613)

## புத்தக ஆர்வலர்கள் கவனத்திற்கு

எம்மிடம் தேவையென நீங்கள் பதிவு செய்துகொண்ட புத்தகங்களும் ஏனைய துறைசார்ந்த (கணனி, கலைகள், தமிழ், சமயம், ஆங்கிலம், சிறுவர் இலக்கியம், மருத்துவம், ஆங்கில, தமிழ் அகராதிகள்) நூல்கள் வரவழைக்கப்பட்டுள்ளன. தேவையானவர்கள் வந்து பெற்றுக்கொள்ளவும்.

புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி - யாழ்.

(12183)

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை
## வரவு - செலவுத்திட்டம் - 2003

2003ஆம் ஆண்டுக்குக் கிடைக்கக்கூடிய பிரதேச சபை வருமான மதிப்பீட்டையும் உத்தேச செலவின விவரங்களையும் உள்ளடக்கிய பச்சிலைப்பள்ளி பிரதேச சபை வரவு - செலவுத் திட்டம் 23.12.2002 தொடக்கம் ஏழு நாள்களுக்கு பச்சிலைப் பள்ளி பிரதேச சபை அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது.

வே.நவரத்தினம்
தலைவர்
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

(C/25612)

## 2003ஆம் ஆண்டு இசைவிழாவையொட்டி இளங்கலைஞர் மன்றம் நடத்தும் இசைப்போட்டி (வாய்ப்பாட்டு)

| பிரிவுகள்:- | | |
|---|---|---|
| | கீழ்ப்பிரிவு | 08-12 வயது வரை |
| | மத்திய பிரிவு | 13-17 வயது வரை |
| | மேற்பிரிவு | 18-22 வயது வரை |

☆ ஒவ்வொரு பிரிவிலும் மூன்று பரிசில்கள்
☆ முதலாம் இடங்களிற்கு தங்கப்பதக்கம்

விண்ணப்பப்படிவங்களை தபால் மூலமாகவோ, நேரிலோ, மன்றப்பணிமனையிலோ 100/= ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் கிடைக்கவேண்டிய கடைசித் திகதி:- 2003-01-15 போட்டி 2003 ஜனவரி இறுதியில் மன்ற கலாமண்டபத்தில் நடைபெறும்.

*இளங்கலைஞர் மன்றம்,*
*சட்டநாதர் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
- செயலாளர்.
(12189)

## தசாக கிருகயஞ்ஞ அழைப்பு

*அன்புடையீர்,*

சித்திரபானு வருடம் மார்கழி மாதம் முதலாம் நாள் (16.12.2002) திங்கட்கிழமை இரவு நல்லூரில் அமரத்துவமடைந்த எமது குடும்பத்தலைவர்

பாரத்வாஜ கோத்திரம்
### பிரம்மஸ்ரீ பத்மநாபஐயர் சர்வேஸ்வரஐயர்

அவர்களின் அபரக்கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

25.12.2002 (மார்கழி 10) புதன்கிழமை தசாகம் பகல் 10.00 மணிக்கு
26.12.2002 (மார்கழி 11) வியாழக்கிழமை ஏகோதிஷ்டம், மாசிகம் பகல் 10.00 மணிக்கு
27.12.2002 (மார்கழி 12) வெள்ளிக்கிழமை சபிண்டீகரணம் பகல் 10.00 மணிக்கு
28.12.2002 (மார்கழி 13) சனிக்கிழமை கிருகயஞ்ஞம் பகல் 10.00 மணிக்கு

மேற்படி கிரியைகளிலும் 28.12.2002 அன்று நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

98, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(12185)
ச.பத்மநாபன் (மோகன்)
*(மகன்)*

# இரண்டாவது டெஸ்டிலும் நியூஸிலாந்து அணி வெற்றி

ஹெமில்டன்,டிசெ.24

இந்திய அணியுடனான இரண்டாவது கிரிக்கெட் போட்டியில் நியூஸிலாந்து அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. இவ் வெற்றியின் மூலம் இரு போட்டிகள் கொண்ட இத் தொடரை 2-0 என்ற அடிப்படையில் நியூஸிலாந்து அணி கைப்பற்றியுள்ளது.

இவ்விரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி கடந்த 19 ஆம் திகதி முதல் ஹெமில்டன் நகரில் ஆரம்பமானது. முதல்நாள் ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்டது.

இரண்டாம் நாள் ஆட்டத்தின் போது முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 8 விக்கெட்டை இழந்து 92 ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்தது. 3 ஆவது நாளன்று காலை மேலதிகமாக 7 ஓட்டங்களைப் பெற்று எஞ்சிய விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் வி.வி.எஸ்.லக்ஸ்மன் 23 ஓட்டங்களையும் ஹர்பஜன் சிங் 20 ஓட்டங்களையும் பெற்றனர். ஏனையோர் 10இற்கும் குறைவான ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.

நியூஸிலாந்து அணியின் பந்து வீச்சின் சார்பாக டெரவ் டஃப்பி 12 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுககளையும், ஷேன் பொண்ட் 39 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி தனத முதல் இனிங்ஸில் 94 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் அணித் தலைவர் பிளமிங் 25 ஓட்டங்களையும், ரிச்சார்ட்சன், ஸ்ரைறிஸ் ரஃப்பி ஆகியோர் தலா 13 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஸஹீர்ஹான் 29 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை வீழ்த்தினார். நெஷ்ரா, ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

மூன்றாவது நாளன்று தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி அன்றைய தினமே அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது இதில் ராகுல் ராவிட் 39 ஓட்டங்களையும், டெண்டுல்கார், ஷேவாக் மற்றும் ஹர்பஜன்சிங் ஆகியோர் முறையே 32,25,18 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் ரஃப்பி, ஓரம் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

மூன்றாம் நாள் ஆட்ட முடிவில் விக்கெட் இழப்பின்றி 24 ஓட்டங்களைப் பெற்ற நியூஸிலாந்து நான்காவது ஆவது நாள் ஆட்டத்தின் போது 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றிக்கு வேண்டிய 160 ஓட்டங்களைப் பெற்றது. ஆஷிஸ் நெஷ்ரா 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இப்போட்டியில் விளையாடிய எந்தவொரு வீரரும் அரைச்சதம் பெறவில்லை.

1981 ஆம் ஆண்டில் பார்மிங்ஹாமில் நடைபெற்ற இங்கிலாந்து - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான போட்டியில் எந்தவொரு வீரரும் அரைச்சதம் பெறவில்லை. 21 வருடங்களுக்குப் பின் மீண்டும் அவ்வாறானதொரு நிலை நிகழ்ந்துள்ளது.

இப்போட்டியின் சிறப்பாட்டக் காரராக டெரல் டஃப்பி தெரிவு செய்யப்பட்டார். (ஓ-5)

# விளையாட்டு

## இந்திய அணிக்கு அபராதம்

நியூஸிலாந்துடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் குறித்த ஓவர்கள் பந்துவீசத் தவறியமைக்காக இந்திய கிரிக்கெட் அணிக்கு ஊதியத்தில் 35 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரணடாவது டெஸ்ட் போட்டி முடிவுற்ற பின்னர் மத்தியஸ்த்தர் மைக் புறொக்டர் இதை அறிவித்தார்.

வெலிங்டனில் நடைபெற்ற முதலாவது போட்டியில் நியூஸிலாந்து அணியின் முதல் இனிங்ஸின் போது உரிய நேரத்தில் வீச வேண்டிய ஓவர்களை விட 6 ஓவர்கள் குறைவாக வீசியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

"இரண்டாவது போட்டியிலும் நியூஸிலாந்து அணியின் இரண்டாவது இன்னிங்ஸில் இந்திய வீரர்கள் மெதுவாகவே பந்து வீசினர். எனினும், நடுவர்களுடன் கலந்தாலோசித்த பின் இதற்காக தண்டனை விதிக்காதிருக்கத் தீர்மானித்தேன்." இவ்வாறு புறொக்டர் கூறினார். (ஓ-5)

**யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழு நடத்தும் சமய அறிவுப் போட்டிக்கான பரீட்சையை பிற்போடலும் விண்ணப்ப முடிவு திகதியை நீடித்தலும் - 2002**

வலயக் கல்விப் பணிப்பாளர்களின் அனுசரணையுடன் 29.12.2002 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பின்வரும் பரீட்சை நிலையங்களில் நடைபெறவிருந்த மேற்படி பரீட்சை மாணவர்களினதும் பெற்றோர்களினதும் ஏகோபித்த கோரிக்கைக்கமைவாக எதிர்வரும் 19.01.2003 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்குப் பிற்போடப்பட்டுள்ளது. அதற் கமைவாக விண்ணப்ப முடிவு திகதியும் 18.01.2003வரை நீடிக்கப்பட்டுள்ளது.

01. யா/ வட இந்து மகளிர் கல்லூரி
02. யா/ உடுப்பிட்டி பெண்கள் உயர்தரப் பாடசாலை
03. யா/ விக்கினேஸ்வராக் கல்லூரி, நெல்லியடி.
04. யா/ இராமநாதன் கல்லூரி
05. யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
06. யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி
07. யா/ இந்து மகளிர் கல்லூரி
08. யா/ வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்

*குறிப்பு :* 2002ஆம் ஆண்டில் தாம் கல்விகற்ற தரத்தின் அடிப்படையிலேயே அனைத்து மாணவரும் மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

சைவசமய விவகாரக் குழு
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
(C/25608)

## பகிரங்க ஏலம்

**பருத்தித்துறை பிரதேச சபையின் பின்வரும் மீன் சந்தைகள், இறைச்சிக் கடைக்கான பகிரங்க ஏலம் 27.12.2002ஆம் திகதி வெள்ளி காலை 10.00 மணிக்கு தலைமை அலுவலகத்தில் நடைபெறும். மேலதிக விவரங்களை பருத்தித்துறை பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

1. பொற்பதி மீன் சந்தை
2. மணற்காடு மீன் சந்தை
3. மந்திகை மாட்டிறைச்சிக்கடை

*தலைமை அலுவலகம்,*
*பருத்தித்துறை பிரதேச சபை,*
*புலோலி.*
*23.12.2002.* (C-25603)

ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்,
தவிசாளர்
பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி.

## துயர் பகிர்கின்றோம்

எமது குடும்ப நண்பரும், யா/மத்திய கல்லூரி ஆசிரியரும், இருபாலை எக்ஸ்பிறஸ் கல்வி நிறுவனத்தின் அதிபருமான

***த.வரதராஜா*** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி இராசமணி தம்பிப்பிள்ளை**

அவர்களின் மறைவு காரணமாகத் துன்புற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

V.T. ராஜேந்திரா குடும்பம்
R/2/4, Anderson Flate,
Narahenpita, Colombo - 5
T.P.: 01-590524

(12172)

## மூன்றாவது நாளில் மூன்று சாதனைகள்

இந்திய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்டின் மூன்றாவது நாளான சனிக்கிழமையன்று 3 சாதனைகள் பதிவாகின. விவரம்:

★ டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் முதன் முறையாக ஓர் இன்னிங்ஸில் இரு அணிகளுமே 100 ஓட்டங்களுக்கு குறைவான ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்திருக்கிறது. (முதல் இன்னிங்ஸ்: இந்தியா - 99, நியூஸி.,94)

★ ஆட்டத்தின் மூன்றாவது நாளன்று மட்டும் 22 விக்கெட்டுக்கள் வீழ்ந்தன. (காலையில் ஆட்டம் ஆரம்பமாகியதும், முதல் இன்னிங்ஸில், இந்தியாவின் இரு விக்கெட்டுக்கள், நியூஸியின் 10 விக்கெட்டுக்கள், இரண்டாவது இன்னிங்ஸில் இந்தியாவின் 10 விக்கெட்)

★ நியூஸிலாந்து அணித்தலைவர் ஸ்டீபன் பிளமிங் டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது 111 ஆவது பிடியைப பிடித்தார். இதன் மூலம், அதிக பிடிகளைப் பிடித்தவர்கள் பட்டியலில் பழைய ஜாம்பவான்கள் பாபி சிம்சன், வால்ட்டல் ஹேமண்ட் ஆகியோரைக் கடந்து சென்று எட்டாவது இடத்துக்கு முன்னேறினார் பிளமிங். (ஓ-5)

## ஆஸ்திரேலிய அணியில் மெக்கில்

இங்கிலாந்துடனான நான்காவது ஆஷஸ் கிரிக்கெட் போட்டிக்கான ஆஸ்திரேலிய அணியில் ஸ்டுவர்ட் மெக்கில் சேர்க்கப்பட்டுள்ளார். சுழல்பந்து வீச்சாளரான மெக்கில், ஷேன்வோர்னுக்குப் பதிலாக அணியில் இடம்பெற்றுள்ளார். இதுவரை 17 டெஸ்ட் போட்டிகளில் 82 விக்கெட்டுகளை அவர் வீழ்த்தியுள்ளார்.

5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலிய அணி 3-0 என்ற அடிப்படையில் முன்னணியில உள்ளது. 4 ஆவது போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி மெல்போர்னில் ஆரம்பமாகவுள்ளது. 5ஆவது போட்டி ஜனவரி 2 ஆம் திகதி முதல சிட்னியில் நடைபெறவுள்ளது.(ஓ-5)

## சிறந்த கோல்வ் வீரர், வீராங்கனை

இவ்வருடத்திற்கான சிறந்த 'கோல்வ்' விளையாட்டு வீரராக அமெரிக்க வீரர் ரைகர்வூட்ஸ் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். சிறந்த வீராங்கனையாக அன்னிக்கா சொரேன்ஸ்டம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்க விளையாட்டுத்துறை சார் எழுத்தாளர்களினால் இத்தெரிவு மேற்கொள்ளப்பட்டது. ரைகர்வூட்ஸ் தொடர்ச்சியாக நான்காவது வருடமாக இவ்விருதை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-5)

## 15 வயதுக்குட்பட்டோர் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட்:

# பாகிஸ்தான் அணி சம்பியன் இலங்கைக்கு இரண்டாமிடம்

15 வயதுக்குட்பட்டோருக்கான ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பாகிஸ்தான் அணி சம்பியனாகியது.

இறுதிப் போட்டியில் இலங்கை அணியை 46 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணி வென்றது.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் டிசெம்பர் 7 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை இப்போட்டிகள் நடைபெற்றன. 14 அணிகள் இப்போட்டிகளில் பங்குபற்றின.

இறுதிப்போட்டி ஞாயிறன்று சார்ஜாவில் நடைபெற்றது. பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. நிர்ணயிக்கப்பட்ட 40 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 233 ஓட்டங்களைப பெற்றது அவ்வணி.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 15 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அதன் பின் இலங்கையின் வெற்றி வாய்ப்பு கை நழுவியது.

40 ஓவர்களில் 187 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது இலங்கை அணி.

இத்தொடரில் அரையிறுதிப் போட்டிகளில் இலங்கை அணி இந்தியாவையும், பாகிஸ்தான் அணி நேபாளத்தையும் வென்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-5)

## முரளியின் திருமணம் எப்பொழுது? அவரது தந்தையார் அளித்த பதில்



கண்டி,டிசெ.24

சர்வதேச புகழ் சுழற்பந்து வீச்சு நட்சத்திரம் முத்தையா முரளிதரனுக்குத் திருமணம் எப்பொழுது? இது குறித்து அவரது தந்தையான தொழில் அதிபர் முத்தையா பதிலளித்திருக்கிறார்.

முரளிக்கு அடுத்த ஆண்டு ஏப்ரல் 17ஆம் திகதி 31 வயது. அவர் திருமண வாழ்க்கையில் இணைந்து கொள்வது பற்றி என்ன நினைக்கிறீர்கள் என நிருபர் அவரிடம் வினவினார்.

முரளி டெஸ்ட் ஆட்டங்களில் 437 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருக்கிறார். ஷேன்வோர்ன் 491 விக்கெட்டுக்களை சரித்திருக்கிறார். மேற்கிந்திய வீரர் கட்னி வோல்ஸ் 519 விக்கெட்டுக்களை வீழ்த்தி ஓய்வுபெற்றுவிட்டார். முரளி இத்துறையில் தொடர்ந்து திறமைகாட்டுவாராயின் அவரது வயது எல்லைப்படி 1,000 விக்கெட்டுக்களை வீழ்த்தக் கூடிய எதிர்பார்ப்பு இருப்பதாக ஆஸ்திரேலிய வீரர் ஷேன் வோர்ன் குறிப்பிட்டிருந்தார்.

என்றாலும், நானும் அவரது தாயாரும் முரளியை இதுபற்றி அணுகிப்பார்த்தோம். 500 விக்கெட்டுக்களை வீழ்த்திய பின்னரே இதுபற்றித் தீர்மானிப்பேன் என்று முரளி தெரிவித்திருக்கிறார். அதுவரையும் நாமும் பொறுத்திருந்து பார்ப்போம் என்று புன்னகையுடன் பதிலளித்தார் முத்தையா.

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஒழுக்காற்றுச்சபைப் பொறுப்பாசிரியர்
*க. வரதராஜா* அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி தம்பிப்பிள்ளை இராசமணி**

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தவர்களின் துயரில் நாமும்பங்கு கொள்வதுடன் அவரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம், யாழ்.மத்தியகல்லூரி
(12177)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வைரமுத்து மகேஸ்வரி

"மகேஸ்தான்", வதிரி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் சாஸ்திரியாவளவு, அல்வாய் வடக்கு, அல்வாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வைரமுத்து மகேஸ்வரி நேற்று (23.12.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் வைரமுத்துவின் அன்பு மனைவியும் சபானந்தராஜா (லண்டன்), ரவீந்திரராஜா (லண்டன்) ஆகியோரின் தாயாரும் ஜெயராணி, சாரதாதேவி (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் ராஷ்மி, ராஜிகா, தருண் (லண்டன்), திஸன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.12.2002) திங்கட்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*சாஸ்திரியாவளவு,*
*அல்வாய் வடக்கு,*
*அல்வாய்.* (12178)

தகவல்:
ரவீந்திரராஜா (மகன்)

## திருமதி கணபதிப்பிள்ளை இராசம்மா

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை இராசம்மா நேற்று (23.12.2002) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராமாசி சின்னத்தம்புவின் அன்பு மகளும் செல்லப்பா-நாகம்மாவின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் உலகநாதன் (கண்ணன் பேக்கரி, புங்குடுதீவு), பத்மநாதன் (கண்ணகி ஸ்ரோர்ஸ், புங்குடுதீவு), குருநாதன் (சுவிஸ்), ஜெகநாதன் (கண்ணன் பேக்கரி, புங்குடுதீவு), சிறிநாதன் (ஜேர்மனி), கலாநிதி, பரமேஸ்வரி, கனகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் கண்ணம்மா, யோகம்மா, இராஜேஸ்வரி, மகேஸ்வரி, ஆனந்தி, செந்தில்ராஜா, காலஞ்சென்ற அருளம்பலம் மற்றும் சிறிதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் வனிதா, சபேசன், பத்மகுமார், சர்மிளா, சர்மிளா, ரூபிகா, விஜிதன், கோகிலன், டினோஜா, சீலன், சுசனா, செந்தூரன், கார்த்திகன், தனிஷா, தற்பரன், தர்சினி, தயாபரன், வசந்தகுமாரி, சிறிரஞ்சன், நிறைஞ்சினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை, தாழையங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
க.உலகநாதன்
(மகன்-கண்ணன் வெதுப்பகம்),
க.பத்மநாதன்
(மகன்-கண்ணகி வர்த்தக நிலையம்
புங்குடுதீவு).

(12181)

# ஜோதிடம்

இந்திய பரம்பரை ஜோதிடர் **அருள்வாக்கு அம்பிகா அம்மா** முதல்முறையாக யாழ். மாநகருக்கு வருகை.

**கைரேகை, ஜாதகம்** பார்க்கப்படும். **ஜாதகம்** எழுதிக்கொடுக்கப்படும்.

எந்த வகையான பிரச்சினைகளானாலும் ஜாதக ரீதியாக உங்களுக்குச் சரிசெய்து கொடுக்கப்படும். நீங்கள் வாழ்வில் வெற்றியும் நிம்மதியும் அடைய இன்றே **அருள்வாக்கு அம்பிகா** அம்மாவைச் சந்திக்கவும்.

கொழும்பு மற்றும் வவுனியாவில் **அம்மா**விடம் வாக்குக்கேட்டுப் பலன் அடைந்தோர் அநேகர்.

நீங்களும் நற்பலனடைய அம்மாவை உடன் சந்திக்கவும்.

சந்திக்கும் இடம்: **அருள்வாக்கு அம்பிகா அம்மா,**
மடோனா லொட்ஜ்
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(லிங்கன் கிறீம் ஹவுஸ் அருகில்) (12169)

பார்க்கும் நேரம்: *காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை.*


# இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்
## ஆசிரியர், மாணவர்களுக்கான ஓர் அறிவித்தல்

*எமது நிறுவன அதிபரின் அன்புத் தாயார்*

## திருமதி தம்பிப்பிள்ளை இராசமணி

அவர்கள் அமரத்துவம் அடைந்துள்ளமையால் வகுப்புகள் யாவும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இன்று (24.12.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு இடம்பெறவுள்ள அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு அனைவரும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மீண்டும் (26.12.2002) வியாழக்கிழமை முதல் வழமைபோல் வகுப்புகள் நடைபெறும் என்பதையும் அறியத்தருகிறோம்.

**- நிர்வாகத்தினர்.**

**இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்**

☞ நிறுவனத்துடன் தொடர்புள்ளவர்கள் அனைவரும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ளவும். (சி-25505)

# எம்.ஜி.ஆர். நினைவுதினம்

அராலி,டிசெ.24

மறைந்த தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ராமச்சந்திரனின் 15 ஆவது ஆண்டு நினைவு தினத்தை அராலி மத்தி எம்.ஜி.ஆர். மறுமலர்ச்சிக்கழகம் நாளைமறுதினம் வியாழக்கிழமை அனுஷ்டிக்கவுள்ளது.

கழகத் தலைவர் செ.சக்திதாசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், வன்னிப் பெருநிலப்பரப்பு எம்.ஜி.ஆர். முன்னேற்றக் கழகப் பிரதிநிதிகள் கலந்து சிறப்பிப்பர்.

மேற்படி விழாவில் பட்டிமன்றம், பேச்சு மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (எ-ரி)

# புத்தூர், ஈவினை பகுதிகளிலும் பாதீனியம்

அச்சுவேலி,டிசெ.24

புத்தூர், புன்னாலைக்கட்டுவன், ஈவினை, நவக்கிரிப் பகுதிகளில் பாதீனியம் பெருமளவில் வளர்ந்துள்ளது.

பயிர்ச்செய்கை நிலங்களிலும் வீதியோரங்களிலும் தரிசு நிலங்களிலும் பெருமளவில் காணப்படும் பாதீனியம், பருவமழையைத் தொடர்ந்து மிகத் தீவிரமாகப் பரவுவதாகப் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (எ-11)

# வீதி புனரமைப்பு இல்லை; பாதசாரிகள் சிரமம்

சங்கானை,டிசெ.24

பலவருடங்களாக திருத்தப்படாமல் இருந்த சங்கானை சந்தையை அண்டிய வீதியிலும் -

நாகலிங்க சுவாமி வீதிகளிலும் பறிக்கப்பட்ட கல், மணல் போன்றவை சிந்திச் சிதறி பாதசாரிகளுக்கு பெரும் சிரமத்தையும் போக்குவரத்துக் கஷ்டத்தையும் கொடுக்கின்றது எனக் கூறப்பட்டது.

கல், மணல் பறித்து மூன்று மாதங்களுக்கு மேலாகியும் வீதிப் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படாமல் இருப்பதையிட்டு இப்பகுதி மக்கள் பெரும் விசனம் அடைந்துள்ளனர். (எ-29)

# துயர் பகிர்கின்றோம்



*The Express Institute*
Irupalai, Kopay.

திருமதி
## தம்பிப்பிள்ளை இராசமணி

எமது நிறுவன அதிபர்
திரு.த.வரதராஜா அவர்களதும்
ஆசிரியை
திருமதி கருணானந்தன் றஞ்சனாதேவி
அவர்களதும் அன்புத் தாயார்
**திருமதி தம்பிப்பிள்ளை இராசமணி**

அவர்கள் இயற்கையெய்தியமையையிட்டு துயருற்றிருக்கும் அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அத்துயரில் நாங்களும் பங்கு கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
துணை ஆளணியினர். (சி-25506)


## வான் வழிப்பயணமா?

786

### தரை வழிப்பயணமா?



பலவருட காலமாக யாழ். - கொழும்பு பஸ் சேவைகளுக்கான ஆசனப் பதிவுகளை மேற்கொண்டுவரும் ஆர்.பி.(B)

பஸ் ஆசனப் பதிவகத்தார் யாழ். மக்களுக்கு கிறிஸ்மஸ் தினத்தில் இருந்து துரித கதியில் பிரயாணம் செய்வதற்கு தரைவழி, வான்வழிக்கான டிக்கெட்டுகள், சொகுசு பஸ் மற்றும் வான் ஆகியவற்றின் ஆசனப்பதிவுகளை ஒரே இடத்தில் பதிவுசெய்யவுள்ளார்கள். ஆகவே, உங்கள் பயண டிக்கெட்டுகளை ஒரே இடத்தில் பதிவுசெய்து கொள்ள,

**ஆர்.பி.(B) பஸ் ஆசனப்பதிவகம்**
15, பெரியகடை
(மரக்கறி மார்க்கெட் அருகில்),
யாழ்ப்பாணம்.

வைரவர் கோயில் அருகில்,
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
T.P. 0777 737368 (C/25604)

# சலூன் தேவைக்கான

பேரம் (Bayrom), ஆவ்ரசேவ் (After Shave) விசேட விலைக் கழிவுடன் பெற்றுக்கொள்ள

## "சந்தியா மல்ரி கோட்யாட்"

*531, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்.* (12167)

பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.


# கண்ணீர் அஞ்சலி

எமது அன்புக்குரிய த. எக்ஸ்பிரஸ் கல்வி நிறுவன இயக்குநர்
திரு.த.வரதராஜா அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி தம்பிப்பிள்ளை இராசமணி

அவர்களின் மறைவையிட்டு நாம் மிகவும் துயருறுகின்றோம். அன்னாரது பிரிவால் வேதனையுறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*இருபாலைச்சந்தி,*
*கோப்பாய்.* (12173)

*கோல்டன் டக்*
*படப்பிடிப்பாளர்கள்.*

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி றஞ்சனாதேவி கருணானந்தம்**
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி இராசமணி தம்பிப்பிள்ளை

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
(12170) **யா/கோப்பாய் நாவலர் வித்தியாலயம்**

# கண்ணீர் அஞ்சலி

எமது லயன்ஸ் கழக செயலாளர்
**லயன் த.வரதராஜா**
அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி இராசமணி தம்பிப்பிள்ளை

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆறுதலையும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**Lions Club,**
**Kopay.**

(12171)

# கண்ணீர் அஞ்சலி

எமது நலன்புரிச் சங்க உறுப்பினரும், எமது திணைக்கள அலுவலருமாகிய திரு.க.குகதாசன் அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி கதிரவேலு சரஸ்வதி

அவர்கள் காலமான செய்திகேட்டு ஆழ்ந்த துயருறுகின்றோம். அவரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*பிரதேச செயலகம்,*
*நல்லூர்.* (12166)

நல்லூர் பிரதேச செயலக
உத்தியோகத்தர்களும்,
நலன்புரிச் சங்க உறுப்பினர்களும்.

# மரண அறிவித்தல்

## Pw.டி.வல்லிபுரம் யோகரட்ணம்

*(ஓய்வுபெற்ற புத்தளம், கற்பிட்டி உதவி அரசாங்க அதிபர் அலுவலக எழுதுவினைஞரும் தற்போது M.Nagaratnam & Coஇல் கடமையாற்றியவரும்)*

வத்துக்கமையைப் பிறப்பிடமாகவும் ஊரெழு மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட Pw.டி.வல்லிபுரம் யோகரட்ணம் அவர்கள் 21.12.2002 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் லீலாதேவியின் அன்புக் கணவரும் கோணேஸ்வரன் (சுவிஸ்), சற்குணதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் செல்வராணி (சுவிஸ்), தர்மலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பாபீடஸ், சாரு ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான ஓவசியர் சுப்பிரமணியம், கைலாயபிள்ளை, திருமதி கமலாம்பிகை, திருமதி வல்லிநாயகி, நாகேஸ்வரி மற்றும் திருமதி குமாரசாமி நாகேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரரும் மகேஸ்வரி (மலேசியா), ரமேஸ்வரி (மலேசியா), அலகேஸ்வரி (கொழும்பு), புனிதவதி (கொழும்பு), பரஞ்சோதி (மலேசியா), காலஞ்சென்ற புஸ்பராணி ஆகியோரின் அருமை மைத்துனரும் காலஞ்சென்ற தவராசா, நவரெட்ணராஜா (நாகரத்தினம் அன் கோ), மனோகரன் (நாகரத்தினம் அன் கோ), மாலதி (ஜேர்மனி), கணேசராசா (லண்டன்), ரமேஸ் (லண்டன்), ஜெயமோகன் (ஜேர்மனி) ஆகியோரின் சிறிய தந்தையாரும் ஞானமலர் (மலேசியா), நாகேஸ்வரி (ஆசிரியை, யா/வேம்படி மகளிர் கல்லூரி), நந்தினி, நவீந்திரலிங்கம் (ஜேர்மனி), தமிழ்ச்செல்வி (லண்டன்), திலகவதி (லண்டன்), கிரிஸ்லா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் தூசன், கார்த்திகா, சுஜமுகி, லம்போதரன், சதீஸ், திலோஸ், மஞ்சரி, டிலானி, ஜெனனி, இம்மானுவேல், கேசிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.12.2002) புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சுன்னாகம், ஊரெழு மேற்கு பொக்கணை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஊரெழு மேற்கு,*
*சுன்னாகம்.*
T.P. :0777 312549

தகவல்:
யோகரட்ணம் குடும்பத்தினர்.
(12162)

# தொழிலாளர்களின் குருதியை உறிஞ்சும் அரசியல்வாதிகள் செயல் கவலைக்குரியது

## மறியல் போராட்டத்தில் கலந்துகொண்டு மாவை உரை

யாழ்ப்பாணம்,டிசெ.24

ஆண்டாண்டு காலமாக அரசியல நடத்திவந்த அரசியல்வாதிகள் அடக்கி ஒடுக்கப்பட்ட தொழிலாளர் வர்க்கத்தின் குருதியை உறிஞ்சிக் குடித்து வந்துள்ளனர். அதே போன்றதொரு செயற்பாட்டை இன்றுள்ள அரசியல் வாதிகளும் செய்து வருவது மிகவும கவலைக்குரிய விடயமாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழர் கூட்டமைப்பைச் சேர்ந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

நேற்று பனை அபிவிருத்திச் சபை தலைமை அலுவலகத்திற்கு முன்பாக வடமாகாண பனை தென்னைவள கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் நடத்தப்படும் மறியற் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. நேற்றும் அப்போராட்டம் தொடர்ந்த போது அதில்கலந்து கொண்டு மாவை சேனாதிராசா எம்.பி. உரையாற்றினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தொழிலாளர் வர்க்கத்தின் சொத்தாக விளங்கும் திக்கம் வடிசாலையை மீளவும் அவர்களுக்கே வழங்க வேண்டும் என உங்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் மறியற்போராட்டமும், உங்களது கோரிக்கைகளும் நியாயமானவை.

கடந்த தேர்தல் காலத்தில் பிரசாரத்தில் ஈடுபட்ட ஐ.தே.க. யாழ். மாவட்ட வேட்பாளர்கள் தாம் வெற்றி பெற்றால் திக்கம் வடிசாலையை வடமராட்சி - பனை தென்னை வளகொத்தணியிடம் மீள வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்து அத் தொழிலாளர்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிப் பீடம் ஏறினர். ஆனால், இன்று வரை அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

சென்ற ஆட்சிக்காலத்தில் வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் தமிழ விவகார அமைச்சுக்குப்பொறுப்பாக இருந்த டக்ளஸ் தேவானந்தா தனக்குள்ள அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளுக்கு முரணான வகையில் திக்கம் வடிசாலையை தனது அமைச்சின கீழ் உள்ள பனை அபிவிருத்திச் சபையிடம் கையளித்தார். அப்போதிருந்த சூழ்நிலையில் அவருடைய இந்த நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்த முடியவில்லை. ஆனால், இன்று அதற்கேற்ற காலநேரம் கைகூடி வந்துள்ளது.

எனவே இதற்குப் பொறுப்பாக இருப்பவர்கள் தொழிலாளர் வர்த்தகத்தால் முன்னெடுக்கின்ற இப் போராட்டத்திற்கு மதிப்பளித்து திக்கம் வடிசாலையை அவர்களிடம் கையளிக்க வேண்டும்.

அதனை விடுத்து தொழிலாளர் வர்த்தகத்தின் வயிற்றில் அடித்து அவர்களின் பணத்தில் தானதர்மம் வழங்குவதனால் எந்தவித விமோசனமும் கிடைக்கப் போவதில்லை.

அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளை அரசு ஏற்று நடவடிக்கை எடுக்க வேண்டுமாக இருந்தால் இங்கு அதற்குப் பொறுப்பாக இருக்கும் அமைச்சர் இவர்களின் கோரிக்கைகளை ஏற்க முன்வர வேண்டும். அப்போதுதான் இப் போராட்டத்திற்கு முடிவு கிடைக்கும்.

உங்களுடைய நியாயமான கோரிக்கைகள் பற்றி ஏனைய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும், பிரதமருடனும் கலந்தாலோசித்து உரிய தீர்வை எடுத்துத்தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

அதற்கு பிரதமரும் சம்பந்தப்பட்டவாகளும் தகுந்த நடவடிக்கைகளை எடுக்காத பட்சத்தில் உங்களுடைய போராட்டத்தில் இணைந்து நாங்களும் போராட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்பதனையும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-5)

## மஜிக் நிகழ்ச்சி பார்ப்பதற்காக மக்கள் திரண்டனர்

அரியாலை,டிசெ.24

நீண்டகாலஇடைவெளிக்குப் பின்னர் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று ஆரம்பமான 'கிலிகிலி மஜிக்' மாயாஜால நிகழ்ச்சியைப் பார்வையிடவென பெரும் எண்ணிக்கையானோர் மண்டபத்தில் ஒன்றுகூடினர்.

இந்தியாவின் கர்நாடக மாநிலம் உடுப்பியைச் சேர்ந்த பேராசிரியர் சங்கர் தலைமையிலான குழுவினரே இந்த மஜிக் நிகழ்வை நடத்தினர்.

மாயாஜால மஜிக் நிகழ்வு இன்றும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-17)

## கூட்டமைப்புக் குழு இன்று நெடுந்தீவுக்குச் செல்லும்

யாழ்ப்பாணம்.டிசெ.24

நெடுந்தீவில் தரையிறங்கிய ஈ.பி.டி.பியினரை வெளியேறக் கோரி மக்கள் மேற்கொண்டுவரும் போராட்டத்தைப் பார்க்கவும் அவர்களுடன் கலந்துரையாடவும் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று அங்கு செல்லவிருக்கின்றது.

(ம-3)

## நெடுந்தீவில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் சரணடைந்தார்

நெடுந்தீவில் தங்கியுள்ள ஈ.பி.டி.பி. உறுப்பினர்களில் ஒருவர் தங்களிடம் சரணடைந்துள்ளதாக நெடுந்தீவு பொது மக்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான மட்டக்களப்பைச் சேர்ந்த குணம (வயது-33) என்ற ஈ.பி.டி.பி உறுப்பினரே தமது அமைப்பிடம் சரண்அடைந்துளளார் என்று ஒன்றிய பிரதிநிதியால் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ம-3)

## கரபந்தாட்டம்

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தென்னிலங்கை விளையாட்டு அதிகாரிகள் தெரிவுக் குழுவிற்கும் யாழ்.மாவட்ட கரபந்தாட்ட தெரிவுக்குழுவிற்குமிடையிலான சிநேகபூர்வ கரபந்தாட்டப் போட்டி ஒன்று இன்று மாலை 4 மணிக்கு ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய ஆடுகளத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.கரப்பந்தாட்டச் சங்கத் தலைவர் கப்டன் வி.ஏ.எம்.குணசிங்கம் தலைமையில் இந்த ஆட்டம் இடம்பெறும்.

(ம-3)

# சாரதி அனுமதிப் பத்திரம் பெற வாய்மொழி மூலப் பரீட்சையும்!

## உண்டு என்கிறார் உதவி ஆணையாளர்

யாழ்ப்பாணம்,டிசெ.24

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான வாய்மொழி மூலப் பரீட்சையும் யாழ்ப்பாணத்தில் நடைமுறையில் உள்ளது. எழுதவோ, வாசிக்கவோ முடியாதவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றமுடியும்.

யாழ்.மாவட்ட. மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் எஸ்.பத்மநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

21.12.2002ஆம் திகதிய உதயனில் "நீங்களும் லைசென்ஸ் எடுத்து விட்டீர்களா?" என்ற தலைப்பில் வெளியாகியிருந்த கட்டுரையில் யாழ்ப்பாணத்தில் வாய்மொழி மூலப் பரீட்சை நடத்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்த விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒருவர் வாய் மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றுபவராயின் அதற்கு முன்னர் அவர் நான்கு தடவைகள் எழுத்துப் பரீட்சை மூலம் தோற்றி சித்தியடையாதவராக இருக்க வேண்டும். பின்னர் 5ஆவது தடவையாக புதிய விண்ணப்பப்படிவம் ஒன்றைப் பூர்த்தி செய்து அனுப்பவேண்டும். தான் எழுதவோ, வாசிக்கவோ முடியாதவர் என்பதை தனது பகுதி கிராம அலுவலரிடமிருந்து பெறும் கடிதம் ஒன்றினூடாக உறுதிப்படுத்திய பின்னர் தனது பகுதி பிரதேச செயலர் மூலமாகவும் உறுதிப்படுத்தி மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.

- இதேவேளை செயன் முறைப் பரீட்சைக்குத் தோற்றும் போது வீதியில் பள்ளங்கள், தண்ணீர் இருந்தால் வீதியில் பயணம் செய்யும் ஏனையவர்களுக்கு இடையூறு இல்லா விட்டால் வெட்டித் திருப்ப முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

(ம-8)


SPOKEN ENGLISH WITH GRAMMAR

ஆரம்பம் :- 25.12.2002 புதன் 5 p.m.

(புதன்,வெள்ளி 5 மணி)

By:- R.A.NIROJAN

Soda Company Lane, Mallakam.

(12159)

நாகம்ஸ் சுன்னாகம்

அர்ஜுன், சிம்ரன், மும்தாஜ் நடித்த

ஏழுமலை (ரீலீஸ்)

காட்சிகள்: 11.00, 3.00

விசேட காட்சிகள்: வெள்ளி, சனி, ஞாயிறு 6.30 (பி.நே.)

(12136)

ராஜா யாழ்ப்பாணம்.

எம்.ஜி.ஆர் அவர்களின் 15 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு எம்.ஜி.ஆர், ராதாசலூஜா நடித்த

இதயக்கனி

10.30, 2.30, 6.30

நிறைஞ்சனாஸ் சங்கானை

அர்ஜுன், தபு, சார்லி நடித்த

தாயின் மணிக்கொடி

காட்சி நேரம்:11.00, 2.45, 6.00 (பி.நே.)

நாளைமுதல்: தென்காசிப்பட்டணம்

ஒரு நாள் கோழிக்குஞ்சு விநியோகம்

பிராந்திய கோழிப்பண்ணை- அச்சுவேலி

மேற்படி பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் ஒருநாள் கோழிக்குஞ்சுகள் 26-12-2002இல் பண்ணையில் விநியோகம் செய்யப்படும். பெறவிரும்புவோர் பண்ணையில் பதிவுகளை மேற்கொள்ளவும்.

*விலை: பேடு - 34 ரூபா, புறொயிலர் - 32 ரூபா*

குறிப்பு :- ஒருநாள் தொடக்கம் 60 நாள்கள் வரையிலான குஞ்சுகளும் விற்பனைக்குண்டு.

(C/25609)

எல்லோருக்கும் தொலைபேசி இணைப்பு

தேவையான இடத்தில் குறைந்த செலவில் உடனடி மேசைத் தொலைபேசி (Land Phone) இணைப்புக்கள் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : 078 615957

(C/25616)

முயற்சி - திறன் விருத்தி மையம்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், யாழ்ப்பாணம்.

TRRO

புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பம்

இளைஞர், யுவதிகளின் எதிர்கால வாழ்வை வளம்படுத்துதல் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எமது நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்ற பின்வரும் பயிற்சிநெறிகளுக்கு புதிதாக மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பயிற்சி நெறிகள் | தகைமைகள் | பயிற்சிக்காலம் | நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| தமிழ் தட்டச்சு | ஜி.சீ.ஈ சாதாரணதரம் சித்தியடைந்திருத்தல் தமிழ் - C | 06 மாதம் | யாழ்ப்பாணம் (வாரநாள்கள்) இனுவில் (வாரஇறுதிநாள்கள்) |
| ஆங்கிலத் தட்டச்சு | ஜி.சீ.ஈ சாதாரண தரம் சித்தியடைந்திருத்தல் ஆங்கிலம் - C | 06 மாதம் | யாழ்ப்பாணம் (வாரநாள்கள்) இனுவில் (வாரஇறுதிநாள்கள்) |
| உடையமைத்தலும் வர்ணம் தீட்டுதலும் | ஜி.சீ.ஈ சாதாரண தரம் வரை கற்றிருத்தல் | 06 மாதம் | யாழ்ப்பாணம் இனுவில் (வாரநாள்கள்) சில்லாலை |
| வயறிங் றீவைண்டிங் | ஜி.சீ.ஈ சாதாரண தரம் வரை கற்றிருத்தல் | 06 மாதம் | சில்லாலை (வாரநாள்கள்) |
| தட்டச்சு, சுருக்கெழுத்து | ஜி.சீ.ஈ சாதாரண தரம் சித்தியடைந்திருத்தல் தமிழ் - C | 06 மாதம் | இனுவில் (வாரநாள்கள்) |
| புத்தகம் கட்டுதல் | ஜி.சீ.ஈ சாதாரண தரம் வரை கற்றிருத்தல் | 03 மாதம் | இனுவில் (வாரஇறுதிநாள்கள்) |

* விண்ணப்பப்படிவங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
* விண்ணப்ப முடிவு திகதி 05.01.2003

பயிற்சி நெறிகளுக்கு பயிற்சிக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:

தலைவர், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், *106, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.* (C 25611)


# மரண அறிவித்தல்கள்

## கார்த்தியேசு ஐயாத்துரை

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கார்த்தியேசு ஐயாத்துரை நேற்று (23-12-2002) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்தியேசு - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் வள்ளிநாயகியின் அன்புக்கணவரும் மதனரூபி, தேவராணி, நகுலானந்தன்(சதா-சுவிஸ்), காலஞ்சென்ற விஜயகுமார் (கொக்குவில் இந்துக் கல்லூரி) மற்றும் கிரிதரன் (கிரி-கனடா), சியாமளா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற ஜெயபாலன் (முன்னாள் உரிமையாளர், அஜந்தா லொட்ஜ் கொழும்பு) மற்றும் விஜயபாலன்(லண்டன்), நாகநந்தினி (சுவிஸ்), தேவரஜனி (கனடா), செல்வக்குமார்(ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் ஜெயபானு, ஜெயமதனா, ஜெயமலர், அனுஜன், அனுசியா, அனித்தா, வாமணன் (அசோக்), விதுஜன் (அஜித்), நிரூபன், நிதுர்சன், நிவேதன் (சுவிஸ்), நேசராஜ், துவாரகா, தினேஷ்ராஜ், சஜிந்தா (கனடா) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23-12-2002) திங்கட்கிழமை பிற்பகல் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இளந்தாரி கோவிலடி,*
*இணுவில் கிழக்கு,*
*இணுவில்.* (12195)

தகவல்
ஐ.வள்ளிநாயகி(மனைவி)

## பரமயோகி இராஜரட்ணம்

கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், தற்போது வரியப்புலம் - சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பரமயோகி இராஜரட்ணம் 23.12.2002 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமயோகி - சிவபாக்கியத்தின் அன்பு மகனும் மல்லிகாதேவியின் அன்புக்கணவரும் தயாபரன் (கோப்பாய் வடக்கு, றோ.க.த.க.பாடசாலை, ஆசிரியர்), தயாளினி, சிவாஜினி (மருந்தாளர், பயிற்சிநெறி மாணவி, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பொன்னுத்துரை - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும் கனகேஸ்வரி, கனகரத்தினம் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்), பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, சுப்பிரமணியம் (தேநீர்ச்சாலை, இணுவில்), காலஞ்சென்ற வேல்முருகன், சக்திவேல் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் அப்புத்துரை, விஜயமலர், காலஞ்சென்ற சண்முகலிங்கம், கந்தையா, நகுலேஸ்வரி, இராசமணி, நிர்மலாந்தி (சுவிஸ்), காலஞ்சென்ற மனமோகன் (லங்கா சிமெந்து லிமிட்டெட்), மனோகரன் (ப.நோ.கூ.ச., தெல்லிப்பழை), Dr.மகாதேவன் (காங்கேசன்துறை வைத்தியர், தெல்லிப்பழை), மகேந்திரன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.12.2002) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*திருஞானசம்பந்தர் பாடசாலை அருகில்,*
*வரியப்புலம், சுன்னாகம்.* (c/25615)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# பனை அபிவிருத்திச் சபை முன் மூன்றாவது நாளாகவும் மறியல்

யாழ்ப்பாணம்,டிசெ.24

கண்டி வீதியில் பஸ்ரியன் சந்திப் பகுதியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் அலுவலகம் முன்பாக வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்கள் மேற்கொண்டுவரும் மறியல் போராட்டம் மூன்றாவது நாளாக நேற்றும் இடம்பெற்றது.

பனை அபிவிருத்திச் சபையினால் பொறுப்பேற்கப்பட்ட திக்கம் வடிசாலையை மீளப் பெற்றுத்தர வேண்டும் என்று கோரி கடந்த புதன்கிழமை ஆரம்பமான இப்போராட்டம் விடுமுறை நாள்களான சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களின் பின்னர் நேற்று தொடர்ந்து நடைபெற்றது.

நேற்றைய மறியல் போராட்டத்தில் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை -

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் சமாசத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் குழுவொன்றும் கிளிநொச்சியிலிருந்து வருகை தந்து இப்போராட்டத்தில் கலந்து கொண்டது. போராட்டத்துக்கு விரைவில் உரிய தீர்வு கிடைக்காதுவிடின் தமது சமாச அங்கத்துவ நிறுவனங்களின் அனைத்து உறுப்பினர்களையும் இங்கு அழைத்து வந்து போராட்டத்தில் ஈடுபடுத்தவுள்ளதாக நேற்று வருகைதந்த குழுவினர் தெரிவித்தனர்.

இன்றும் போராட்டம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் -

நேற்று முதல் திக்கம் வடிசாலைக்கு முன்பாகவும் தொழிலாளர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு வடிசாலை முன்பாக பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் அமர்ந்திருந்து போராட்டத்தில் ஈடுபட்டதனால் வடிசாலையை திறக்க முடியாமல் போனது. ஊழியர்களும் உட்செல்ல முடியாததால் திரும்பிச் சென்றனர்.

முடிவு கிடைக்கும் வரை போராட்டம் தொடர்ந்து நடைபெறுமென தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

(ம-173-5-10)

*(மற்றொரு செய்தி 13ஆம் பக்கத்தில்)*





வன்னியில் இருந்து வருகை தந்திருந்த வட மாகாண பனை தென்னைவள பேரிணையத்தின் தலைவர் க.இராசதுரை உரையாற்றுவதையும் அருகில் வட மாகாண பனை, தென்னைவள கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் பொ.சிவநேசனையும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவையும் முதலாவது படத்தில் காணலாம். அடுத்துள்ள படத்தில் போராட்டத்தில் கலந்து கொள்வதற்காக வன்னியில் இருந்து வந்திருந்த பேரிணையத்தின் உறுப்பினர்களை காணலாம்.

## கூட்டம் பிற்போடப்பட்டது.

குடாநாட்டில் முற்பணம் பெறப்பட்டும் பொதுக்கட்டடங்களின் புனரமைப்பு கட்டுமாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படாமல் இருப்பதாகக் கூறப்படும் விவகாரம் குறித்து ஆராய்வதற்கென நேற்று யாழ்.செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டம் பிற்போடப்பட்டது.

யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் திருகோணமலையில் நடைபெறும் ஒரு மாநாட்டுக்குச் சென்றிருப்பதால் அவர் வந்த பின்னரே இக்கூட்டம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ம-4)

## பஸ் நிறுவனங்கள் உட்பட 7 நிறுவனங்கள் ஏலம்

கொழும்பு,டிசெ.24

இலங்கை மத்திய போக்குவரத்து சபைக்குச் சொந்தமான எஞ்சிய ஏழு கொத்தணி பஸ் நிறுவனங்களின் 39 சதவீத பங்குகள் எதிர்வரும் 30ஆம் திகதி கொழும்பு பங்குச் சந்தையில் ஏலத்தில் விடப்படும்.

ருகுணு, ஊவா, நுவரெலியா, வடமேல், நியூசஸ்டன், வவுனியா, வடக்கு ஆகிய கொத்தணி பஸ் நிறுவனங்களே விற்பனைக்கு விடப்படவிருக்கின்றன.

இந்த பஸ் நிறுவனங்களைக் கொள்வனவு செய்வதற்கு உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து விலை மனுக்கள் கடந்த 20ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டன. (ம)

## புலிகளுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் தவறான பிரசாரங்களை மேற்கொண்டுவருகின்றன என்று கூறிய அமைச்சர், இந்த சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க அரசு விரிவான அறிக்கை ஒன்றை வெளியிடும் எனவும் சொன்னார்.

நாட்டில் நிரந்தர அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கு நோர்வே அரசு தன்னலம் கருதாது செயலாற்றி வருகின்றது.

நோர்வே அரசின் பங்களிப்புகள் பெரிதும் திருப்திகரமாக இருக்கின்றன. எனவே, நோர்வே அரசின் அனுசரணையுடனான சமாதானப் பேச்சுகள் தொடரும் என்றும் அமைச்சர் பீரிஸ் வலியுறுத்திக் கூறினார். (ம)

## காய்ச்சலால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைக்காக யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இதனால் வார்ட்டுகள் நிரம்பி வழிந்தன. கட்டில்கள் இல்லாததனால் பல நோயாளர்கள் கட்டில்களுக்குக் கீழும் வெளி விறாந்தையிலும் இருக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது.

இதற்கிடையில்-

இந்த வைரஸ் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இருவர் நேற்று உயிரிழந்தனர். புத்தூரைச் சேர்ந்த நாகமுத்து (வயது 54), மல்லாகத்தைச் சேர்ந்த பரம்சோதி இராஜரட்ணம் (வயது 55) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

தற்போதைய மழை காலம் இத்தகைய காய்ச்சல் பரவுவதற்கு உகந்த சூழலை ஏற்படுத்துவதாகவும் -

மக்களை விழிப்புணர்வுடன் நடந்து கொள்ளுமாறும் -

மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

(ம-4-15-139)

# கண்டி வீதிப் புனரமைப்பு அடுத்த மாதம் ஆரம்பமாகும்

கிளிநொச்சி,டிசெ.24

ஏ-9 கண்டி வீதியைப் புனரமைக்கும் பணி அடுத்த மாதம் 7ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றது.

கிளிநொச்சி செயலகத்தில் நேற்று நடந்த கலந்துரையாடலில் இத்தகவல் வெளியிடப்பட்டது.

வவுனியா அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடந்த இக கலந்துரையாடலில் ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த வீதியை தற்காலிகமாக 4 வருட பாவனைக்கு ஏற்றவகையில உடனடியாகப் புனரமைப்பது என்று இக்கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கி ஒதுக்கியுள்ள ரூபா 50 கோடி மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஒதுக்கியுள்ள ரூபா 20 கோடி ஆகியவற்றின் மூலம் இந்த வீதி புனரமைக்கப்படவிருக்கின்றது.

இந்த வீதிப் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள 6 ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்பட்டனர். அவர்கள் நேற்று ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டனர்.

(ம-3-4)

# சமஷ்டி பற்றி குடைவோருக்கு அமைச்சர் பீரிஸ் தரும் பதில்

கொழும்பு,டிசெ.24

தனிநாடு இல்லை; நாட்டுப் பிரிவினை இல்லை; ஐக்கிய இலங்கையில் சமஷ்டிக் கட்டமைப்பில் அதிகாரப் பகிர்வு என்று தான் அரசு - புலிகள் ஆகிய இரு தரப்பினரும் பேச்சுக்களின் போது இணக்கம் கண்டுள்ளோம்.

இந்த நிலையில் சமஷ்டிக் கட்டமைப்பில் புலிகளுக்கு என்ன கொடுக்கப் போகிறீர்கள் என்று எதிர்க்கட்சிகள் கேட்கின்றன; கோஷம் எழுப்புகின்றன.

சமஷ்டிக் கட்டமைப்பில் எந்த வகையில் எப்படி அதிகாரப் பகிர்வு என்பதை எல்லாம் இனிமேல்தான் பேசித் தீர்மானிக்க வேண்டும். ஏற்கனவே தீர்மானித்துவிட்டோம் என்றால் இனிமேல் பேச்சு எதற்கு? அதற்கு அவசியம் இல்லையே என்றார் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ்.

முதல் கட்டத்தின் நாலாம் சுற்றுப் பேச்சுகள் எதிர்வரும் ஜனவரி 6ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை தாய்லாந்தில் நடைபெறும்.

அதிகாரப் பகிர்வு பற்றி மட்டுமல்லாமல் அடிப்படை மனித உரிமை பற்றியும் விரிவாக ஆராய இருக்கிறோம். அதற்கு புலிகளும் பூரண இணக்கம் தெரிவித்துள்ளார்கள் என்றும் அமைச்சர் பீரிஸ் சொன்னார். (ம)

## படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுத் தலைமையகத்திடம் தமது நிபந்தனையை அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்திருக்கிறார்கள்.

அந்த நிபந்தனை, புலிகள் தலைமை தங்கள் உறுப்பினர்களிடமிருந்து ஆயுதங்களைக் களைய வேண்டும். பீரங்கிகள், மோட்டார்கள், போன்ற கனரக ஆயுதங்களை அப்புறப்படுத்த வேண்டும். புலிகள் விட்டுச் செல்லும் உயர் பாதுகாப்பு வலயங்களில் பொலீஸாரைத் தேடுதல் வேட்டை நடத்துவதற்கு அனுமதிக்க வேண்டும் என்பதாகும்.

இது பற்றி அரசின் நிலைப்பாடு என்ன என்று ஊடகவியலாளர்கள் கேட்டபோதே அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் வரவேற்கத்தக்க வகையில் நடந்து வருகின்றன. பெரும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. குறுகிய காலத்தில் அரும் பெரும் விடயங்கள் சாதிக்கப்பட்டுள்ளன.

பிரச்சினைக்கு எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு கண்டு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் இலட்சியம் கைகூடும்வரை பேச்சுக்கள் நடைபெறவேண்டும். பேச்சுக்கள் முறிந்து போவதற்கு ஒரு போதும் இடமளிக்க மாட்டோம் என்று உறுதியாக்க கூறினார் அமைச்சர் பீரிஸ்.

படையினர் விதித்த நிபந்தனை அரசாங்கத்தின் நிபந்தனை அல்ல. எனவே, படையினரின் நிபந்தனை இறுதியானதல்ல என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் பீரிஸ் சொல்லி வைத்தார். (ம)

## பிரிட்டனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளை முன் உதாரண நாடுகளாகக் கொள்ளலாம் என்று அவர் கூறினார். அதிகாரப் பகிர்வு விடயத்திலும் நிர்வாக மறுசீரமைப்பு, பொலீஸ் நிர்வாகம் முதலானவற்றிலும் பிரிட்டன் நிபுணத்துவ ஆலோசனை வழங்கத் தயார் என்றும் அவர் தெரிவித்தார். பொருளாதார உதவிகளையும் பிரிட்டன் தாராளமாக வழங்கும் என்றும் அவர் சொன்னார்.

ஒஸ்லோவில் நடைபெற்ற சமாதான ஆதரவு மாநாட்டில் பிரிட்டன் உதவித் தொகையாக வழங்கிய 25 மில்லியன் பவுன்களுக்கு மேலாக இன்னும் 15 மில்லியன் பவுன்களை வழங்க இருக்கிறது என்றும் ஜெக்ஸ்ரோ தெரிவித்தார்.

அடிப்படை மனித உரிமைகள் விவகாரங்கள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மனித உரிமைகள் ஆணையத்தின் முன்னாள் செயலாளர் இயன் மார்ட்டினை கடந்த 13ஆம் திகதி சந்தித்துப் பேசினார். இதன் பின் 16ஆம் திகதி நானும் சந்தித்துப் பேசினேன். எனவே புலிகள் சமாதானப் பேச்சுக்களில் ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதை இதனால் அறிய முடிகின்றது எனவும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார்.

(ம)


வெற்றிடங்கள்

காப்புறுதி பிரதிநிதிகள் - ஆயுள்/பொதுக் காப்புறுதி

Insurance Representatives - Life/General Insurance

கவர்ச்சியான வருமான சந்தர்ப்பங்கள்

மோட்டார் சைக்கிள் / வாகன கடன் வசதி

ஆயுள் காப்புறுதி

வருடாந்த / மாதாந்த போட்டிகள்

பதவி முன்னேற்ற வாய்ப்புக்கள்

கல்விப் பொதுத் தராதர உயர்தரம் (G.C.E. A/L) அதற்கு மேற்பட்ட தகைமைகள், தொடர்பாடல் திறமை அதிகளவு உழைக்கும் ஆர்வம் இருத்தல் வேண்டும். ஆங்கிலம் எழுதவும் பேசவும் தெரிந்திருத்தல் அவசியம். முன் அனுபவம் அவசியமில்லை.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு முழுமையான பயிற்சி வழங்கப்படும். சுய விவரக் கோவை சான்றிதழ்களுடன்

26.12.2002 காலை 9.30 - 12.30 வரை இல.139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள யூனியன் அஸ்யூரன்ஸ் காரியாலயத்திற்கு நேரில் வரவும்.

முகாமையாளர்.

யூனியன் அஷ்யூரன்ஸ்.
ஆயுள் முழுவதும் உங்களைக் காப்போம்.

UNION ASSURANCE
139, Staley Road,
Jaffna. Tel. 3753



வேலையாள் தேவை

எமது நிறுவனத்திற்கு A/L படித்த ஆண்/பெண் உதவியாளர் தேவை.

தொடர்பு:
24.12.2002 செவ்வாய்க்கிழமை 4 மணி

கே.கே.எஸ். வீதி.
இணுவில்.
(12140)



NIRU (Kondavil)

இணைந்த கணிதம்
A/L 2004
* இருதள விசைகள் *
Mon. - 5.00 - 6.30 p.m.,
Thu. - 9.00 - 10.00 a.m. (மு.நே.)
ஆரம்பம் : 26.12.2002
B.Sc.



விற்பனையாகின்றது

Computer Today

உங்கள் அன்புக்குரியவருக்கு புத்தாண்டுப் பரிசாக அவரை சந்தாதாரர் ஆக்குங்கள்!

நீலவு.com
701, K.K.S. Road,
Jaffna.
(12176)



SUPER GRADE - 5

"அமைதியான சூழலில்"
2002 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான விசேட புதிய பிரிவு!

தரம் - 4

02.01.2003 4 மணிக்கு ஆரம்பம்.

தரம் 4 முதல் O/L இவ்விரண்டு பிரிவுகளுக்கும் இன்னும் சில அனுமதிகள் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் சயன்ஸ் அக்கடமி
(நல்லூர் கோவிலுக்கு முன்பாக)
(12146)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.12.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.